# திருக்கோயி...

ஜனவரி 1990 விலை ரூ..





குடந்தை அருள்மிகு ஒப்பிலியப்பன் ஆலயத்திற்கு ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் வருகை தந்தபோது எடுக்கப் பட்ட படம். மயிலாடுதுறை துணை ஆணையாளர் திரு சி. பாலசுப்பிர மணியம், குடந்தை உதவி ஆணையாளர் திரு. ப. தனபால் எம்.ஏ.பி.எல். ஆகியோர் உடன் உள்ளார்கள்.

முகப்பு:

குன்றத்தூர்
அருள்மிகு சுப்பிரமணிய சாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 சுக்கில ஆண்டு தை<br>சனவரி 1990 விலை ரூ. 3-00 | மணி : 1 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருபபம் உள்ளவர்கள்

*உயர்திரு ஆணையர் அவர்கள்*
*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை*
*சென்னை — 600 034*

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

திருக்கோயில் வாசகர்களுக்குப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பொருளடக்கம்

சொல்லுதல் யார்க்கும் எளிய
—மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

அறநிலையத்துறையை மேம்படுத்துவோம்
—அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ., அவர்கள்.

புத்தாண்டில் உங்கள் சிந்தனைக்கு
—அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு ஆர்.சண்முகசிகாமணி ஐ.ஏ.எஸ்.

திருக்கோயில் தழைக்கச் செய்வோம்
—அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்.

முருகனின் அற்புதக் கோலங்கள்
—அருள்முருக செளந்தராஜ அடிகளார்.

காஞ்சி காமாட்சி
—புலவர் ச.சோமசுந்தரம் எம்.ஏ.பி.எட்.

திருப்போரூர் திருமுருகன் கோலங்கள்
—தி. இராசமாணிக்கம்

கந்தவேள் கருணை
—திருமுருக கிருபானந்த வாரியார்.

சித்திரபாரதம் —செவ்வேள்

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை
—வித்யாதீர்த்ததாசன்

பாம்பு விரும்பிய பரமனின் நடனம்
—நடராசன் அடிமை

உண்மையால் உயர்ந்த உத்தமர்
—வே. தியாகராஜன்.

திருவேதிக்குடி —சி. தியாகராஜன்


நவதிருப்பதிகள் —ஆ.வெ. ராமானுஜம்

வைகுண்ட ஏகாதசி
—டாக்டர் த.அமிர்தலிங்கம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# சொல்லுதல் யார்க்கும் எளிய...

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்**



''மலையொன்றைத் தலையில் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் பவனி வருவேன். இது என்னுடைய முதல் திட்டம், வானத்தை வில்லாக வளைத்து அந்தவில்லுக்கேற்றநாணாக மணலைக் கயிறாகத் திரித்துக் காட்டுவேன். இது என்னுடைய இரண்டாவது திட்டம், அடுத்தடுத்து இன்னும் பல அற்புதத் திட்டங்களை வைத்திருக்கிறேன். அவற்றைப் பின்னர் இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் நிறைவேற்றிக் காட்டுவேன்.''

இவ்வாறு, பொது மக்களின் மன்றத்தின் நடுவே தோள்தட்டி அறைகூவல் விடுத்தான் ஒரு வாலிபன். மக்கள் அவன் வார்த்தைகளை வாய் பிளந்தவாறு கேட்டு மயங்கிப் போயினர். இப்படி ஒரு வாலிபன் வீரம் பேசிக் கொண்டு திரிவது மன்னரின் காதுக்கும் எட்டியது. அவனைக் கொலு மண்டபத்திற்கு அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தார். பீடு நடை போட்டுக் கொலு மண்டபத்தில் நுழைந்த வாலிபனை மன்னர் அலட்சியப்படுத்தாமல், அவன் மக்களிடம் அறிவித்த திட்டங்கள் சாத்தியமானவைதானா? என்று வினவினார்.

''இயலாதது என்று இவ்வுலகில் எதுவுமில்லை அரசே. நான் அறிவித்த திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றுவேன்'' என்று, நிமிர்ந்து நின்று முழங்கினான் அந்த வாலிபன்.

''அப்படியானால், வீரமிக்க வாலிபனே! உன் முதல் திட்டத்தை என் எதிரில் செய்து காட்டுக, தயார்தானா?''

மன்னரின் இந்த ஆவல் ததும்பிய கேள்விக்கு அவன் மிக அமைதியாகப் பதில் அளித்தான்.

''மன்னர் மன்னவா, எதற்கும் சில வசதி வாய்ப்புகள் வேண்டுமன்றோ? நான் நாட்டு மக்களிடமும், தங்களின் திருமுன்பும் கூறிய செயல்களை நிறைவேற்றியே தீருவேன். ஆனால் ஒன்று, நான் நெடுநாட்கள் பயணம் செய்து களைத்துப் போயிருக்கிறேன். தங்களுக்கு விருப்பமிருந்தால் அரண்மனை விருந்தினனாக ஓரிரு மாதங்கள் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். உடலில் வலிவு மிகுந்ததும், என்னுடைய முதல் திட்டமான மலையைத் தலையில் தூக்கும் காரியத்தைச் செய்து காட்டுகிறேன்''.

மன்னர் மகிழ்ச்சியுடன் அவன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். ''ஓரிரு மாதங்கள் என்ன, மூன்று மாதங்கள் முழுமையான காலம் எடுத்துக் கொள்க. அந்த மூன்று மாத காலமும் அரண்மனையில் உனக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்'' எனக் கூறி அவனைத் தட்டிக் கொடுத்தார்.

வாலிபனின் வீரச் செயல்களைக் காண, பொதுமக்கள் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவனுக்கு அரண்மனையில் உல்லாசமான வாழ்க்கை. உடலுக்கு வலிவு தரும் உணவு



வகைகள். உள்ளத்திற்குக் களிப்பூட்டும் பானங்கள், கேட்டபோதெல்லாம் கிடைத்தது அவனுக்கு.

அவன் வெளியிட்ட திட்டங்களை நிறைவேற்றி விடுவானேயானால், அவனையே தனது படையில் தலைமைத் தளபதியாக நியமித்துக் கொள்ளப் போவதாக மன்னன், அமைச்சர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

மூன்று மாதங்கள் முடிவுற்றன. முதல் திட்டம், மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான நாள் அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் மலையடிவாரத்தில் கூடியது. மன்னரும் அமைச்சர் பெருமக்களும், அரண்மனை அலுவலரும் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்திருந்தனர். வாலிபன் வண்ண ரதமொன்றில் வந்து இறங்கினான். அவன் மேனி புதுப்பொலிவுடனும் வலிவுடனும் விளங்கியது. மூன்று மாத கால அரண்மனை வாசத்தின் விளைவு அவன் உடற்கட்டில் நன்கு தெரிந்தது.

அவனைக் கண்ட மன்னரும், மக்களும் கையொலி செய்து வரவேற்றனர். முரசுகள் அதிர்ந்தன. இசைக் கருவிகள் ஒலித்தன. வாலிபன் தன் இரு கைகளையும் உயர்த்தினான். அனைத்து ஒலிகளும் நின்று அமைதி நிலவிற்று. அவன், மலையின் அடிவாரம் நோக்கிச் சென்

## குறளோவியத்தின் சிறப்பு

திருவள்ளுவர் ஈரடியால் மனித எண்ணங்களைத் திருக்குறள் மூலம் அளந்துகாட்டினார். மனிதன் ஆற்ற வேண்டிய பணிகளைச் சுட்டிக் காட்டினார்.

திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அழகும் இனிமையும் செறிந்த ஓவியமாக கலைஞர் திருக்குறள் கருத்துக்களை உருவாக்கி உள்ளார்.

உரைநடையா செய்யுளா என்று கேள்வி எழுப்பும் வகையில் குறளோவியம் அமைந்துள்ளது. அதை ஒவ்வொருவரும் படித்துணர்ந்து தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ''குறளோவியம்'' ஆங்கில நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள்.

றான். அனைவரது விழிகளும் இமைக்காமல் நடக்கப் போகும் நிகழ்ச்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

''நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்'' என்று கூவினான் அவன், ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

ஆனால் நடந்தது என்ன? அவன் மலையைத் தூக்கவில்லை. திரும்பத் திரும்ப ''நான் மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடக்கத் தயார்'' என்பதையே சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் சொற்களையே கேட்டுக் கேட்டு அலுத்துவிட்ட அனைவரும் அவனை நெருங்கிச் சென்றனர்.

''ஏன், அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய்? செய்து காட்டு'' என்று மன்னர் உரத்த குரலில் கூறினார்.

''மன்னா, மலையைத் தலையில் தூக்கிக் கொண்டு நடப்பதாகத்தான் சொன்னேன். அதை மறந்து விடாதீர்கள். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இப்போதே இந்த மலையை என் தலையில் தூக்கி வையுங்கள். அதைத் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் நடக்கிறேனா இல்லையா என்பதைப் பிறகு பாருங்கள்'' என்று மிக அடக்கமாக வாலிபன் விளக்கம் கூறினான்.

''இவனைக் கைது செய்யுங்கள்'' என்று மன்னர் உறுமினார் சிறுத்தைபோல.

''என்னை இனிமேல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் ஒன்று, நான் என் நண்பர்களிடமும், மனைவியிடமும் செய்த சபதத்தை நிறைவேற்றிவிட்டேன். அதாவது அரண்மனையில் முக்கியமான விருந்தினராக ஒரு மாதமாவது இருந்து விட்டு வருகிறேன் என்று சபதம் செய்தேன். அது நிறைவேறி விட்டது''. புன்முறுவல் முகத்தில் பூத்திட அந்த வாலிபன் அச்சமின்றிப் பதில் அளித்தான்.

''அடே, அப்படியொரு ஆசையிருந்தால். உன்னால் செய்ய முடிந்ததைச் சொல்லி அதற்குப் பரிசாக அரண்மனையில் தின்று தொலைத்திருக்கலாமே?'' என்று மன்னர் கோபித்து கொண்டார்.

''செய்யக்கூடியதைச் சொன்னால் அப்படிச் சொல்கிறவனை யார் மதிக்கிறார்கள் அரசே. அற்புதங்களைச் செய்து முடிப்பேன் என்று கூறினால்தான் ஆராதனைகள், அன்பான வரவேற்புகள், அத்தனையும் கிடைக்கின்றன''.

வாலிபனின் பதிலைக் கேட்ட மன்னர் வெகுண்டெழுந்து,

''ஓகோ அதற்காகத்தான் எங்களை ஏமாற்றினாயா?'' என்று கர்ச்சித்தார்.

''அரசர்க்கரசே, நான் இந்த நாட்டுக்குள் நுழையும்போதே இங்கு திருக்குறள் புழக்கத்தில் உள்ளதா? என்று விசாரித்தேன். அரசரே அறியார் திருக்குறளை எனக் கேள்வியுற்றதும் என் முயற்சியில் துணிவுடன் இறங்கினேன். திருக்குறளைப் படித்திருந்தால், தாங்களும் சரி தங்கள் நாட்டு மக்களும் சரி, என் கூற்றினை ஒப்புக்கொண்டிருக்க மாட்டீர்கள்'' இப்படி வாலிபன் பதில் அளித்தான்.

''அப்படியென்ன இருக்கிறது அந்தக் குறளில்?'' இது மன்னரின் கேள்வி. வாலிபன் கூறிய குறள் இதுதான்;

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

ஒரு செயலைச் செய்து முடிப்பேன் என்று வாயளவில் கூறிவிடுவது யார்க்கும் எளிது, ஆனால் சொல்லியவாறு அச்செயலை முடிப்பது எளிதானதல்ல, அரிதானதாகும் — என்பதே இந்தக் குறளுக்குப் பொருள்.

**—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியமாம் தமிழ்க் காவியத்திலிருந்து இக் கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப் படுகிறது.**

## வாசகர் எண்ணங்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கட்டுரைகளும், இனிய தமிழ் நடையில் அறிஞர் பெருமக்கள் எழுதி வரும் புராண இதிகாசக் கட்டுரைகளும் வெகு சிறப்பாக அமைந்து திருக்கோயில் இதழ் மிகுந்த பொலிவுடன் வெளிவருகிறது. வாழ்க திருக்கோயில், பரவுக இறையருள்.

—டி. தியாகராஜ குருக்கள்,
தாயுமானசாமி ஆலயம்,
திருச்சி.


ஆன்மீகப் பேரிதழாகிய ''திருக்கோயில்'' ஏராளமான ஆன்மீக உண்மைகளை வெளியிட்டு வெற்றிகரமாகத் தமிழகமெங்கும் பவனி வருவது பெருமை தருகின்றது.

—எஸ். ராமகிருட்டிணன்,
பெங்களூர்—560020.

# அறநிலையத்துறையை

## மேம்படுத்துவோம்

**மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்**
**கே.பி.கந்தசாமி எம்.ஏ., அவர்கள்**



அறநிலையத்துறைக்கென்று தனி அமைச்சரையும், தனி வரவு செலவுத் திட்டத்தையும் சட்டப் பேரவை விவாதத்தையும் முதன் முதலாக 1970இல் உருவாக்கித் தந்தது நம் அரசு தான்.

திருக்கோயில்களின் நிர்வாகத்தை மேம்படுத்திட வேண்டும் என்ற பெருநோக்கோடு மீண்டும் தமிழக முதல்வராக நம் கலைஞர் அவர்கள் பதவி ஏற்றதும் ''இந்து சமய அறநிலையத்துறை ஆக்கப் பணி ஆலோசனைக் குழு''வை ஏற்படுத்தினார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் உள்ளிட்ட ஐவரைக் கொண்ட ஆலோசனைக் குழுவினரும் அறநிலையத்துறையை மேம்படுத்தத் தக்கப் பல வழிமுறைகளை அறிக்கையாக வழங்கியுள்ளனர். அவ்வறிக்கையை ஆய்ந்து சிறந்த பல செயல் திட்டங்களை விரைவிலேயே முதல்வர் அவர்கள் அறிவிக்க இருக்கிறார்கள்.

தமிழகமெங்கும் உள்ள ஆலயங்களில் திருப்பணிகளை விரைவுபடுத்தித் திருக்குட நீராட்டு விழா நிகழ்த்துதல், திருக்குளங்கள் புதுப்பித்தல், திருத்தேர்கள் புதுப்பித்தல், திருமண மண்டபங்கள் கட்டுதல் போன்ற பல அறப்பணிகளை ஆர்வமுடன் ஆரம்பித்து இருக்கிறோம். இத்தகைய அறப்பணிகளையும் ஏழாண்டுக்காலம் நின்று போயிருந்த திருவாரூர் ஆழித் தேரோட்டம். 7.5.89 இல் சிறப்புற நிகழ்த்தியிருப்பதையும் ஆன்றோர்கள் பலரும் பாராட்டி அறநிலையத்துறையின் பணிகளை ஊக்கப்படுத்தி வருகின்றார்கள்.

அத்தகைய தமிழ்ப் பெருமக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் மேன்மேலும் சிறந்த திட்டங்களைச் சிறப்புற வரும் புத்தாண்டில் நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து என் புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

அறநிலையத்துறையின் ஆக்கப் பணிகளையும் நல்ல ஆன்மீகக் கட்டுரைகளையும் சிறந்த முறையில் வெளியிட்டு வரும் ''திருக்கோயில்'' திங்கள் இதழ் 31 ஆண்டுகள் நிறைவான பணி ஆற்றி இப்போது 32-வது ஆண்டில் அடி எடுத்து வைப்பது அறிந்தும் என் மனமகிழ்ச்சியைத் தெரிவித்து ''திருக்கோயில்'' இதழ் சிறக்க என் வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றேன்.

---


## பொங்கலோ பொங்கல்

பொங்கல் இன்று பொங்கல்
புது வருசப் பொங்கல்
மங்கலங்கள் பொங்க
மனையிலிடும் பொங்கல்
தங்கத்தினால் பானை
தரளம் என அரிசி
பொங்கலும் பால் பொங்கல்
புத்தமுதப் பொங்கல்

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

# புத்தாண்டில் உங்கள் சிந்தனைக்கு...

அறநிலையத்துறைச் செயலாளர்
ஆர். சண்முக சிகாமணி
ஐ.ஏ.எஸ்..



1. ஆலயங்களில் வழங்கப்படும் குங்குமம், வண்ணவண்ண நிறங்களில் கவர்ச்சிகரமாக இருந்த போதிலும் அந்த வர்ணக் குங்குமம் பலர் முகங்களில் நெற்றியில் ஒரு நிரந்தரக் கரு வட்டத்தை ஏற்படுத்திஉள்ளதை நாமறிவோம். நமது மரபுப்படி குங்குமத்தை மஞ்சள் குங்குமம் என்று தான் சொல்லி வருகிறோம். இதனால் பொதுவாக மஞ்சள் வேறு, குங்குமம் வேறு என்று மக்களிடம் தவறான ஒரு கருத்து நிலவி வருகிறது. மஞ்சள் குங்குமம் என்பதன் உண்மையான பொருள், மஞ்சளால் செய்யப்பட்ட குங்குமம் என்பதுதான்.

அருள்மிகு மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் அத்தகைய மஞ்சள் குங்குமம் செய்யும் பேற்றினைப் பரம்பரையாக ஒரு சில குடும்பத்தினர் ஏற்று நடத்தி வருகின்றனர். அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் ஆலயத்தின் அருகிலும், அத்தகைய மஞ்சளால் தயாரிக்கப்பட்ட குங்குமம் ஒரு தனியார் நிறுவனத்தின் மூலம் விற்கப்படுவதை எவ்வளவு ஆஸ்திகப் பெருமக்கள் அறிவார்கள் என்பது தெரியவில்லை. மஞ்சளால் தயாரிக்கப்பட்ட குங்குமம், முகத்தில் நிரந்தர சருமப் புள்ளியையோ அல்லது சரும வியாதிகளையோ ஏற்படுத்துவதில்லை. மாறாக சருமத்திற்கு அது ஒரு பாதுகாப்பாகவும், பொதுவாக அதை அணிபவர்கள் அனைவருக்கும் மங்களம் பயக்கக் கூடியதாகவும் இருப்பதை, ஆண்டாண்டு காலமாக அத்தகைய மஞ்சள் குங்குமத்தை அணிந்து வருபவர்கள் உணர்வார்கள். எனவே, தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களிலும் அர்ச்சகப்பெருமக்களும், ஆஸ்திகப் பெருமக்களும் வண்ண வண்ணக் கலவைகளால் தயாரிக்கப்பட்ட சருமத்துக்குத் தீராத நிரந்தர ஊறு விளைவிக்கும் செயற்கை குங்குமத்தைத்தவிர்த்துத் தொன்று தொட்டு நம் மரபுப்படி மஞ்சளினால் தயாரிக்கப்படும் குங்குமத்தையே அனைவரும் உபயோகிக்க முன்வர வேண்டுகிறேன்.

2. தம் வாழ்வில் ஒளி வீசி உயர்ந்தநிலையில் வாழும் பெரிய மனிதர்கள், தவிர்க்க முடியாத இயற்கைவினை எய்தும்பொழுது, செய்தித் தாள்களில் அத்தகைய இறந்த பெருமகனாரின் புகைப்படம் தாங்கிய விளம்பரங்கள் நாட் கணக்கில், ஏன் மாதக் கணக்காகக் கூடப் பல ஆயிரம் ரூபாய் செலவில் வெளியிடப்படுகின்றன. இது இறந்தவரின் நிலையைப் புனிதப் படுத்தவோ அல்லது அவரது பெருமையை நின்று நிலை செய்யவோ, எவ்விதத்தில் உதவும்? உபயோகித்த செய்தித் தாள்கள் பல வகைகளில் பயன்படுத்தப்படுவதால், அந்தப் பெரிய மனிதரின் திருவுருவம் தாங்கிய புகைப் படம் அடங்கிய தாள்கள், மறைந்தவர் வாழ்ந்த கண்ணியம் மிக்க வாழ்வுக்கும் எதிர் நிலையாக அமையுமேயொழிய, அவரது பெருமையை அவை ஒரு நாளும் வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு அறக்கட்டளைபோல நிரந்தரமாக எடுத்துக் காட்ட சற்றும் இயலாது. இப்படி இறந்தவரின் புகைப்பட விளம்பரத்தை வாரக் கணக்கில் மாதக்கணக்கில், ஏன் ஒரே நாள் செய்தித் தாளில் பல இடங்களில் பிரசுரித்துச் செலவிடும் கணிசமான தொகையினை வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் லட்சோபலட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு அரசு மேம்படுத்தும் சத்துணவுத் திட்டத்திற்கு அளிக்க ஏன் அவர்கள் முன் வரக்கூடாது?


தமிழ்ப் பெருமக்களின் சிந்தனையைத் தூண்ட இந்தஇரு கருத்துக்களைப் புத்தாண்டுச் சிந்தனைகளாக ''திருக்கோயில்'' இதழ் வழி படைக்கின்றேன்.

— 1982 ''திருக்கோயில்'' இதழில் வெளியான கட்டுரையின் ஒரு பகுதி இங்கு நன்றியுடன் மீண்டும் எடுத்து வெளியிடப்படுகிறது.

**திருக்கோயில்**

# தழைக்கச் செய்வோம்!

அறநிலையத்துறை ஆணையாளர்
திருமிகு வ.ராமதாஸ்
ஐ.ஏ.எஸ்.,



இந்து அறநிலையத்துறை வெளியீடாகப் புத்தம்புதுப் பொலிவுடன் அரிய ஆன்மீகக்கருத்துக்களைத் தாங்கித் திங்கள்தோறும் வெளிவரும் நம் ''திருக்கோயில்'' இதழ்வழி புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா'' என்று திருக்கோயில் பணிபுரிய அன்றே அழைப்பு விடுத்தார் அருளாளர் அப்பர் பெருமான். ''அரசர் மனையில் அரசியாய் இருப்பதைவிட அடியார் மனையில் அடியராய் இருப்பதே சிறப்பு'' என்பது அருளுள்ளம் வாய்ந்த ஞானியர்தம் கருத்தாகும்.

தெய்வபக்தியுடன் திருக்கோயில்கள் சிறக்கப் பணியாற்றும் அன்பர்களை-அதே போல் தொண்டாற்றும் பக்தர்களை இறைவன் ஆட்கொண்டு அருள்புரிவான் என்பது திண்ணம்.

''தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே''

என்ற அப்பர் வாக்கும்,

''தனம் வரும் நன்மை யாகும்''

என்ற திருஞானசம்பந்தர் வாக்கும்,

''இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்''

என்ற சுந்தரர் வாக்கும்,

இறைவன் அருளே எல்லாம் என உண்மையுடன் பக்தி செய்ய வல்லார்க்கு இறைவன் எல்லா நலங்களும் அருள்வான் என்பதை உணர்த்தக் காண்கிறோம்.

''திருக்கோயில்'' வாசகர்களுக்கு வரும் புத்தாண்டு மேலும் மேலும் இறையருள் கூட்டும் அருள் ஆண்டாகப் பொலியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வதோடு 31 ஆண்டு நிறைவு பெற்று 32வது ஆண்டாகச் சிறப்புடன் வெளிவந்து கொண்டிருக்கும் ''திருக்கோயில்'' இதழுக்கு இன்றுவரை ஆயுள் அல்லது ஆண்டு உறுப்பினர் ஆகாமல் இருப்பவர்கள் உடன் உறுப்பினராகி எல்லா வளங்களும், நலங்களும் பெற்றுச் சிறக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நம் புண்ணிய பூமியாம் தமிழகத்தில் இறையருளால், இறையருள் வளர்க்கத் தோன்றிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் போற்றிப் பரவிய திருத்தலங்கள் எண்ணற்றவை உள்ளன. வாழையடி வாழையென நம்ஞான பூமியில் வந்து தோன்றிய திருமூலர், போகர், பட்டினத்தார், வள்ளலார் போன்ற தமிழ் ஞானிகளால் பரவிப் போற்றப்பட்ட திருத்தலங்களும் எண்ணற்றவை உள்ளன. இவ்வாலயங்களில் எல்லாம் நாயன்மார்களும், ஆழ்வார்களும், சித்தர் பெருமக்களும் இன்றும் தத்தம் தெய்வ உடலோடு இருந்து நமக்கு வழிகாட்டிக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

அத்தகைய ஞானத்திருத்தலங்களைக் கண்டும், தொழுதும், பாடியும், சிந்தித்தும் பேரின்பம் பெற்றுத் திளைக்கும் சான்றோர் பெருமக்களுக்கு என் வேண்டுகோள் இது தான். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என நீங்கள் திளைத்த பக்திப் பரவசத்தைப் பலரோடு பகிர்ந்து கொள்ள அருமையான கட்டுரைகளைத் ''திருக்கோயில்'' இதழில் வடித்து மன்பதைக்கு வழங்குங்கள் என்ற என் வேண்டுகோளை முன் வைத்து தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

# அருள் முருகனின் அற்புதங்கள்

—அருள்முருக செளந்தரராஜ அடிகளார்—

திருமுருகனுக்கு வாகனங்கள், மயில், யானை, ஆடு ஆகிய மூன்றும்; மயில், யானை இரண்டையும் பல தலங்களில் காணலாம். ஆனால் ஆட்டு வாக னத்துடன் கூடிய முருகனைத் திருப்போரூரில் கண்டுகளிக்கலாம்.

இரண்டு தலைகளைக் கொண்ட முருகனுக்கு அக்னிநாதர் என்று பெயர். இவரை சென்னிமலை யில் சென்று தரிசிக்கலாம்.

முருகன் நான்கு தலைகளுடன் மயில் மேல் அமர்ந்த கோலத்தைத் திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள சின்னாளம்பட்டியில் கண்டு வணங்கலாம்.

ஐந்து தலைகளுடன், எட்டு கரங்களையுடைய முருகனைக் கோவை அவிநாசிக்கருகில் உள்ள புன் செய் புளியம்பட்டியில் உள்ள ஓதிமலையில் பார்த்து மகிழலாம்.

ஸ்ரீமுருகன் ஒருவனுக்குத்தான், இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பன்னிரெண்டு கரங்கள் இருப்பதைக் காணலாம்.

பத்து தலைகளுடன் கூடிய முருகனை குற்றா லத்துக்கு அருகில் உள்ள இலஞ்சியில் கண்டு வணங் கலாம்.

ஏழு அடி உயரமுள்ள முருகனை வல்லக்கோட் டையில் காணலாம்.

எட்டடி உயரமுள்ள முருகனை சென்னை வள சுரவாக்கத்திலுள்ள வேங்கட சுப்பிரமணிய நகரில் உள்ள கோவிலில் காணலாம்.

கையில் தாமரை மலர் ஏந்திய முருகனை ஆனூரில் சென்று தரிசிக்கலாம்.

கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் கோவிலில் முருகன் ஆறு முகங்களுடன், ஆறு கரங்களுடன் இருப்பதைக் காணலாம்.

கழுகு மலையில் முருகனை ஒரு முகம் ஆறு கரங்களுடன் காணலாம்.

அமுத கலசத்தை ஏந்திய முருகனைக் கோடிக் கரையிலுள்ள குழகர் கோயிலில் காணலாம்.

வில்லேந்திய வேலனாக நெய்வேலிக்கருகில் உள்ள வில்லுடையான் பட்டியில் பார்க்கலாம்.

திருச்செங்கோட்டில் முருகன் கையிலுள்ள வேல் கல்லால் ஆனது.

கோவைக்கு அருகில் உள்ள குருடி மலையில் செவ்வகக் கல்லை முருகனாக வழிபடுகிறார்கள்.

பெரம்பலூருக்கு அருகில் உள்ள செட்டிக் குளம் என்ற ஊரில் இருக்கும் முருகன் இருக்கும் மலைக்கும் வடபழனி எனறு பெயர்.

அச்சரப்பாக்கத்திற்கு கிழக்கே, பெருங்கருணை என்ற இடத்தில் இருக்கும் முருகன் தலம் நடுபழனி என்பதாகும்.

பெங்களூரில் அனுமந்தபுரத்தில் முருகன் இருக்கும் மலைக்குப் பொன் பழனி என்று பெயர். ''மௌன்ட் ஆப் ஜாய்'' என்பார்கள்.

குறத்தி கொண்டையுடன் வள்ளியும், கீரீடத் துடன் தெய்வயானையும் இருபுறமும் விளங்க ஆறரை அடி உயரமான முருகனை பொன்னேரி அருகில் உள்ள பெரும்பேடு என்ற தலத்தில் காணலாம்.

குன்றக்குடியில், முருகன், வள்ளி, தெய்வ யானை ஆளுக்கொரு மயிலில் அமர்ந்த கோலத்தைக் காணலாம்.

சென்னை மயிலையில், ஸ்ரீமுருகன் மயில் மீதும், வள்ளி, தெய்வயானை இருவரும் இருபுற மும் யானை மீதும் அமர்ந்த கோலத்தைக் காண லாம்.

60 வருடங்களைக் குறிப்பதாக 60 படிகளைக் கொண்டது சுவாமிமலை.

365 நாட்களைக் குறிப்பதாக 365 படிகளைக் கொண்டது திருத்தணிகை மலை.

மதுராந்தகத்திலுள்ள வடசிற்றம்பலம் முரு கன் கோயில் குளத்தில், உப்பு, கரிப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கசப்பு என ஆறு சுவைகளை உடைய ஆறு கிணறுகளைக் காணலாம்.

கந்தனைக் குழந்தையாக பார்வதியின் கையில் பார்த்து மகிழ வழுவூர் செல்ல வேண்டும்.

நாகத்தின் மேல் நிற்கும் முருகனைக் காண சென்னை மேற்கு மாம்பலத்திலுள்ள முருகாஸ் ரமத்திற்குச் செல்ல வேண்டும.

அறுபடை முருகனையும் ஒன்றாகச் சென்னை திருவொற்றியூரிலுள்ள அமைதியகத்தில் கண்டு ரசிக்கலாம்.

பனைமரத்திலான முருகனைக் காணத் திருப் போரூர் செல்ல வேண்டும்.

சென்னை எண்ணூரில் வடத் திருச்செந்தூர் என்று ஓர் முருகன் தலம் உள்ளது.

இன்னும் முருகனின் அற்புதக் கோலங்கள் எத்தனை எத்தனையோ? அனைத்தும் கண்டவர் யார்?

# காஞ்சி காமாட்சி

**புலவர் ச. சோமசுந்தரம்**, எம்.ஏ.,பி.எட்.,

இராசிபுரம்.

**காஞ்சியின் சிறப்பு**

''தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத் தூய மாந்தர் வாழ் தொண்டை நாட்டியல்பு'' எனச் சேக்கிழாராலும்,

'தொண்டை நாடு சான்றோர் உடைத்து'' என ஔவையாராலும் சிறப்பிக்கப்பட்ட தொண்டை நாட்டில், கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகரம் முக்தி தரும் ஏழு திருத்தலங்களில் ஒன்றாகும். காளிதாசரும் ''நகரேஷீ காஞ்சி' எனச் சிறப்பித்துள்ளார். அயோத்தி, மதுராபுரி, ஹரித்துவார், காசி, அவந்தி, துவாரகா என்பன மற்றைய ஆறு முக்தி தரும் தலங்களாகும்.

**பெயர்க் காரணம்**

காஞ்சி மரம் நிறைந்து இருந்ததால் காஞ்சி என்றனர். வீடுபேறு பெற நிலையாமையைக் கூறுவது காஞ்சித்திணையாகும். இக்காஞ்சித் திணை பாடிய சான்றோர்கள் பலர் வாழ்ந்தமையால் இப் பெயர் வந்தது என்பர். மேகலைக்குக் காஞ்சி யென்பது பெயர். இடையில் அணியப்படும் ஆபரணம். உலகிற்கும் இந்தியாவிற்கும் உந்திச் சுழி போல இடையில் இருப்பதால் காஞ்சியென்றனர்.

**காஞ்சியின் பழமை**

புத்தரே வந்து அறம் உரைத்ததாகக் கூறுவதால் 2500 ஆண்டுகட்கு முற்பட்டது. 2243 ஆண்டுகளுக்கு முற்பட்ட யுவான் சுவாங், காஞ்சியில் அசோகனின் ஸ்தூபிகள் இருந்தன எனக்குறிப்பிடுகின்றார். 2072 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த பதஞ்சலி தம் மாபாடியத்தில் காஞ்சியைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

''மலர்தலை யுலகத்துள்ளும் பலர் தொழ
விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்'' என
பெரும்பாணாற்றுப் படை என்னும் சங்க நூல் குறிப்பிடுகிறது.

மாமூலனார் (காஞ்சியில் மாமரத்தில் தோன்றிய மூலமாகிய சிவபெருமான்) காமக் கண்ணியார் (காமாட்சியின் பெயர்) என்ற பெயர் கொண்ட சங்கக் காலப் புலவர்கள் வாழ்ந்தமையால் வள்ளுவனாரின் காலத்திற்கு முன்பே காஞ்சியின் பழமையும், சிறப்பும் பரவியுள்ளது.

1800 ஆண்டுகளுக்கு முன்பு மணிமேகலை காஞ்சிக்கு வந்து அறவணர் என்னும் பௌத்த அடிகளை வணங்கியதும், அமுதசுரபி கொண்டு உணவு வழங்கியதும், வடமொழிப் புலவர் தண்டி காஞ்சியைப் புகழ்ந்ததும் அதன் பழமையின் சிறப்பை உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாக உணர்த்தும்.

**நகர அமைப்பு**

''ஏரி யிரண்டும் சிறகா எயில் வயிறாக்
காருடைய பீலி கடிகாவா — நீர் வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயில் போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு''— எனத்
தண்டியலங்காரம் என்ற அணி இலக்கண நூல் காஞ்சியின் நகர அமைப்பை மயிலோடு ஒப்பிட்டுப் பாடுகிறது.

**சமய மேடை**

''போதியார் பிண்டியார் என்றிவர் பொய்ந்நூலை வாதியா வம்மினம் மாவெனும் கச்சியுள்'' எனச் சம்பந்தர் பாடியிருப்பதால், பற்பல சமயத்தாரும் தம் கொள்கைகளை நிறுவ வாதிடும் மேடையாகக் காஞ்சி நகரம் விளங்கியது எனலாம். இங்கே ஆயிரம் கோவில்கள் பெரியதும் சிறியதுமாக இருந்தனவென்பர். சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் இங்கே சிறப்புற்று விளங்கின.

**கோவில்களின் காட்சி**

கிழக்கே வரதரும், மேற்கே ஏகாம்பரரும், நடுவில் காமாட்சியம்மன் கோவிலும் அமைந்திருப்பது மதுரைமீனாட்சியம்மன் திருமணக்கோலத்தை நினைவு படுத்துகிறது.

ஏகம்பத்துக் கோவிலுக்கும், காமாட்சியம்மன் கோவிலுக்கும் இடையில் குமரக் கோட்டம் அமைந்திருப்பது சோமாஸ்கந்த வடிவத்தை நினைவுறுத்துகின்றது. சத்து, சித்து, ஆனந்தம் ஆன சச்சிதானந்த காட்சியைக் காட்டுகின்றன.

எனவே, ''ஏலநற் கடம்பன் தந்தை யிலங்கு மேற்றளி'' என அப்பர் தேவாரம் பாடுகின்றது.

''மலையினார் மகளோர் பாகம் மைந்தனார்
மழுவொன் றேந்தி
சிலையினான் மதில்கள் மூன்றும் தீயெழச் செற்றச்
செல்வர்
இலையினார் சூலமேந்தி ஏகம்பம் மேவி னாரைத்
தலையினால் வணங்க வல்லார் தலைவர்க்கும்
தலைவர் தாமே''

என அப்பர் தேவாரம் ஏகம்பனின் பெருமையை ஏத்துகின்றது.

**அருள் பெற்றவர்**

ஐயடிகள் காடவர் கோன், திருக்குறிப்புத் தொண்டர், சாக்கிய நாயனார், மார்க்கண்டேயர் ஆகியவர்கள் இங்குள்ள ஏகம்பனின் அருளைப் பெற்ற சான்றோர்களாவர். தேவாரத் திருமுறை யாசிரியர்களும் பட்டினத்தடிகளும் மெய்யுருகப் பாடிப் பரவியுள்ளனர்.

''ஆலந்தான் உகந்தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழு தேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையுளானை



ஏலவார் குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே''

எனச் சுந்தரர் உருகிப் பாடிய தேவாரத்தால், திருவொற்றியூரில் இழந்தகண்களில் ஒன்றை ஏகம்பன் இன்னருளால் பெற்றார் என்பதை அறியலாம்.

**விளையாட்டால் வந்த வினை**

விளையாட்டாக தேவி இறைவனின் கண்களை மூட உலகம் இருள்சூழ உயிர்கள் தடுமாறின. இத்துன்பம் விளைத்த விளையாட்டுக்குக் கழுவாய் செய்ய, ''என்னைஎவரும் அடையவாயிலாய்உள்ள காஞ்சிக்குப் போய் ஆகம முறைப்படி அர்ச்சனை செய்து முப்பத்திரண்டு அறங்களையும் செய்க'' எனப் பணித்தார் கணவன்.

**அவதாரம் செய்தல்**

பத்திரிகாச்சிரமத்தில் காத்யாயனர் குழந்தை பேற்றுக்காகத் தவம் செய்ய, அம்பிகை அவ்விடத்திலேயே குழந்தையாகத் தவழ்ந்தார். காத்யாயனீ என்ற பெயர் கொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர வளர முனிவர்க்கும் அவதார காரணங்கள் விளங்க, உரியவைகளைக் கொடுத்துக் காஞ்சிக்கு அனுப்பினார். வழியில் வறுமையால் வாடிய காசி நகரில் பன்னீராண்டு பசி நீக்க அன்னதானம் செய்தாள், பிறகு அங்கிருந்து காஞ்சிக்கு வந்தாள்.

**காஞ்சியென உணர்தல்**

புலித்தோல சோமவிருத்தம், இடம் ஆதார பீடம், கங்கை மணல் இலிங்கம், ருத்ராட்சமாலை வில்வமாலை, குடை நாகாபாரணம், யோகத் தண்டம் திரிசூலம், விசிறி கிளி, சாமரங்கள் இரண்டு பெண்கள், புத்தகம் காமதேனு, வித்யாதாரம் ஊசி, வறுத்த பயிறு முளைத்த பாலி, இங்ஙனம காத்யாயனர் கூறிய வண்ணம் மாற்றம் அடைந்த இடமே காஞ்சியெனக் கொண்டு அருந்தவம் இயற்றினார்.

**தவம் செய்தல்**

நான்கு வேதங்களைக் கிளையாகக் கொண்ட (ஏக அம்ரம்) ஒற்றை மாமரத்தின் அடியில் மணல் இலிங்கத்தை ஊசி முனையில் இருந்து தவம் செய்து வழிபட்டார். (ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ள இம்மாமரம் 3500 ஆண்டு வயது உடையதென்பர்)

**தழுவி மகிழுதல்**

அப்போது சடையிலுள்ள கங்கையைப் பெருகச் செய்தார். அன்னையின் கட்டளைப்படி. பணிப்பெண் ஒருத்தி காளி வடிவில் தடுத்தார். இயலவில்லை. விஸ்வரூபியாகத் திருமாலும் தடுத்தார். தடுக்க இயவில்லை. இறைவனின திருவுள்ளம் என்று அறிந்து, மணல் கரைந்து இலிங்க வடிவம் போகாதிருக்கவும் இறைவனைச் சரண் அடையவும் தேவி இலிங்கத்தையே கையாலும் மார்பாலும் தழுவிக் கொண்டார்.

தேவியின் பொன் மேனி தழுவி மகிழ்ந்த சிவனார் மாமரத்தினின்றும் வெளிப்பட்டு நின்றார. மணலில் பட்டது போல் இறைவன் திருமேனியிலும் வளைத் தழும்பும் முலைத் தழும்பும் திகழ்ந்தன. எனவே, ஏகாம்பரருக்குத் ''தழுவ குழைந்த நாதர்'' என்று பெயர் வந்தது.

**திருமணக் காட்சி**

முன்பு கைலை திருமணத்தைப் பாராத அகத்தியர் கண்டு களிக்க பங்குனி உத்திர முழு நிலா நாளில் தேவியின் திருமணம் நடைபெற்றது. இன்றும் பெரிய திருவிழாவாகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பங்குனி உத்திர முழு நிலா இரவில்

தேவியின் திருமணம் நடைபெறும். அதேநேரத்தில் அதே மண்டபத்தில் சாதி பேதமின்றிப் பலரும் திருமணம் செய்து கொள்ளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

பிரமனும் திருமாலும் கைதொழப் பேரழல் ஆய பெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தணன் அணங்கி னோடு அமருமிடம்
கரவில் வண்கையினார்கள் வாழ்கலிக் கச்சிமா மாநகருள்
மரவம் சூழ்பொழில் ஏகம்பம் தொழ வல்வினை மாய்ந்தறுமே

எனச் சம்பந்தர், ஏகம்பனைத் தொழ வல்வினை மாயும் எனச் சிறப்பிக்கப்பாடுகிறார்.

**சக்தி பீடம்**

பரத கண்டத்திலுள்ள 64 சக்தி பீடங்களுள் ஒட்டியாணப் பீடமாகிய ஜகந்நாதமும், ஜலாந்திர பீடமாகிய ஜ்வாலாமுகியும், காமராஜப் பீடமாகிய காஞ்சியுமே உயர்ந்தவை யாகும்.

**காமாட்சி பெயர்க் காரணம்**

கா என்பது சரஸ்வதி, மா என்பது திருமகள், அட்சி என்றால் கண்களால் அருள்பாலிப்பவள் என்பது பொருள். ஞானம் தரும் வலது கண்ணால் பிரம்மாவுக்குச் சரஸ்வதியையும், போகமும் அருளும் தரும் இடது கண்ணால் திருமாலுக்குத் திருமகளையும் உருவாக்கிக் கொடுத்தாள். அதனால் கலைமகளும் அலைமகளும் மலைமகளாகிய காமாட்சிக்கு இருபுறமும் கவரி வீசுகின்றனர். எனவே, காமாட்சி எனப்பெயர் பெற்றாள். அதனால் தான் அபயகரமும் வரம் அளிக்கும் கரமுமின்றி, பாசம், அங்குசம், மலர் அம்பு, கரும்புவில் ஆகியவைகளை நான்கு கைகளில் கொண்டு 24 காயத்ரீ வர்ணங்களைத் தூணாகக் கொண்ட காயத்ரீ மண்டபத்தின் நடுவே சுயம்புவாகத் தோன்றி அன்னை காமாட்சி காட்சி தருகிறாள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழிலுக்கும் நியமிக்கப்பட்ட பஞ்ச பிரம்மாக்களை ஆசனமாக்கிப் பத்மாசனம் செய்த கோலத்தோடு அன்னை காட்சி தருகிறாள்.

**சக்தி வாய்ந்த பீடங்கள்**

ஸ்ரீசக்ர பீட அமைப்பில் காமக் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. என்றாலும் ஆதி சங்கரர் மூல காமாட்சிக்கு எதிரில் வட்ட வடிவமான தொட்டிப் போன்ற பீடம் அமைத்துள்ளார். இந்தப் பீடத்தில் எட்டு இலட்சுமிகளும் உள்ளனர். இந்தப் பீடமும் பிலாகாசமும் சக்தி வாய்ந்தவை யாகும்.

**பந்தகாசூரனை அழித்தல்**

பந்தகா சூரனை அழிக்குமாறு தேவர்கள் சிவனை வேண்ட, கைலையிலுள்ள கோமுகியின் பால் அமைந்த பிலம் வழியே மூழ்கிக் காஞ்சியில் உள்ள பிலத்தில் எழுந்து சுயம்புவாக உள்ள காமாட்சியைத் தொழுதுய்யுமாறு கூறினார்.

அவ்வாறே தேவர்கள் செய்ய கைலையில் உறங்கிக் கொண்டிருந்த பந்தகாசூரன் கண்டத்தில் ஏறி மிதித்து, அவனைச் சிரச் சேதம் செய்து தேவர்க்கு அச்சம் தோன்றாதபடி செய்து பின் காஞ்சிக்கு மீண்டும் சென்று காட்சித் தருகின்றாள்.

---

## புத்தாண்டு உறுதிமொழி

**இறைவா! எல்லோருக்கும் அன்பு செய்யும் விரிந்த இதயத்தைத் தா!**

**உழைப்பு! உழைப்பு! உழைப்பு!**

**இதுவே இந்த ஆண்டின் குறிக்கோளாகக் கூட்டித் தருக இறைவா!**

**—தவத்திரு குன்றக்குடி அடிகளார்.**

---

**திருமகள் செருக்கு**

திருமகள் தன் செந்நிற மேனியழகால் செருக்குற்றுத் தன் கணவனான திருமாலின் கருப்பு நிறத்தைக் கேலி செய்யத் திருமாலின் கோபத்தாலும் சாபத்தாலும் உருவழிந்தாள். அன்னை காமாட்சியின் குங்குமப் பிரசாதத்தைப் பூச மீண்டும் உருவழகு வரப் பெற்றாள்.

**பங்காரு காமாட்சி**

சுவர்ண காமாட்சியாகிய பங்காரு காமாட்சியைக் கவர மைசூரை ஆண்ட ஹைதர் அலி திட்டமிட்ட செய்தி அறிந்து, சியாமா சாஸ்திரியின் மூதாதையர் ஒருவர் செஞ்சி, உடையார்பாளையம், திருவாரூர் வழியாக வந்து தஞ்சை நாயக்க மன்னரிடம் தரப் புனுகு சட்டத்தில் வைத்தனர். 1941ல் காமகோடிபீடம் ஆச்சாரிய சுவாமிகள் பங்காரு காமாட்சியின் பாதங்களைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்துள்ளார்.

**முந்நிலை மாடம்**

கோயில் பண்டங்களைக் கவர்ந்த ஒரு பூதத்தை அடக்குமாறு அன்னை ஆணையிடத் திருமால் நின்று, இருந்து, கிடந்து, அதன் வலியடங்கச் செய்த காட்சியை இக்கோட்டத்தில் வடமேற்கில் உள்ள குளக்கரையில் மூன்று நிலையுள்ள மாடத்தில் காணலாம்.

**கவி பாடிய கவிஞர்கள்**

துருவாசர் கிருத யுகத்தில் பழையோள் எனப்புகழப்பட்ட பராசக்தியாகிய காமாட்சியை இரண்டாயிரம் சுலோகங்களால் பாடியுள்ளார். மூக சங்கரர் பிறவி ஊமையாய் இருந்து அன்னை காமாட்சியால் ஆட்கொள்ளப்பட்டுப் பெருங்கவியாகி அன்னையைப் போற்றிப் பாடியுள்ளார்.

**உருகி வழிபடுவோம்**

செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் அடியார்கள் கூட்டம் அன்னையின் அருளைப் பெற அலைமோதும். விசேட பூசை பௌர்ணமி அன்று நடைபெற்று வருகிறது. நவராத்திரி விழாவும், மாசி மாத பிரம்மோற்சவமும் சிறப்பாக நடைபெற்று அன்னையின் அருளைப் பெறுகின்றனர். நாமும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடல் நனைந்து நனைந்து, வனைந்து வனைந்து நெஞ்சக் கனக்கல்லு நெகிழ்ந்துருகித் தாயின் தாள்களில் பணிந்து சரணடைவோம்.

**ஓம் சக்தி ஓம்!**

# திருப்போரூர் முருகன் திருக்கோலங்கள்

தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்.

சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியில் சுமார் 58 கிலோ மீட்டர் தொலைவில் திருப்போரூர் திருத்தலம் உள்ளது. ''நிகரில் போரூர்'' என்றும் ''தினகரனை நிகர் சமரபுரி'' என்றும் சிறப்பிக்கப்பெற்ற இந்தத் தலத்தின் பழமை மிக்க திருக்கோயில் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளால் திருப்பணி செய்யப் பெற்றது. அவரால் இயற்றப்பட்ட முருகனின் அற்புதப் பாடல்கள் கொண்ட ''திருப்போரூர் சந்நிதி முறை'' இந்தக் தலத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. மேலும் இது அருணகிரிநாதரின் 4 திருப்புகழ் பாடல்களைப் பெற்ற திருத்தலம். ''சகலவேதமுமே தொழு சமரபுரி'' என்பது அவரது திருவாக்கு. இங்குள்ள முருகனது திருக்கோயிலில் அவனது அரிய வடிவங்கள் 5 உள்ளன.

## தேசிகசுப்ரமணியன்

''ஸ்ரீதத்வநிதி'' என்ற நூலில் கூறப்பட்ட முருகனது திருவுருவங்களில் இது ஒன்று. பிரணவத்தின் பொருளைத் தன் தந்தையான சிவபெருமானுக்கு உபதேசிக்கும் வடிவம் இது.

''மத்த முடித்தருள் அத்தர் ப்ரியப்பட
நித்த மறைப்பொருளைத் தெரிவித்தவன்''

என்பர் அருணகிரிநாதர் தமது ''திருவகுப்பில்''. எனவே, இவன் தகப்பன்சாமி என்ற பெயரைப் பெற்றான். சிவபெருமானும் முருகனும் ஒரே இடத்தில் இருக்குமாறு உருவாக்கப்பட்ட செப்புச் சிலை வடிவம் இங்குள்ளது. சிவபெருமான் தன் முன் இருகைகளையும் ,தன் வாய் அருகே வைத்துள்ளது ஒரு மாணவன் தன் ஆசிரியனிடம் கல்வி கற்கும் போது எந்த நிலையில் இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கியமாக விளங்குகிறது. முருகனுக்கு 6கைகள் விதிக்கப்பட்டிருக்க இங்கு அவனுக்கு 4 கைகள் தாம் அமைக்கப்பட்டுள்ளது. அவனது முன் இருகைகளில் ஒன்று ஆசிரியன் என்பதற்கு ஏற்ட சின்முத்திரையில் உள்ளது.

இது நம்முன்னோர்கள் உலோகப் படிமக் கலையில் அடைந்திருந்த உன்னத நிலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

## ஆடு ஊர்தியான்

நாரதர் இயற்றிய வேள்வியில் எழுந்து நாசத்தை விளைவித்த ஆட்டை அடக்கி தன் வாகனமாக முருகன் கொண்டதாகக் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

''போருகத்தகரையூர்ந்த புண்ணிய மூர்த்தி'' என்பர் வள்ளலார் பெருமான். ஆனால், ஆகமங்களில் ஆடு ஊர்தியாகக் கூறப்படவில்லை. திருப்பரங்குன்றம் மற்றும் திருமலைகுடைவரைக் கோயில்களில் முருகன் அமைந்துள்ள பீடங்களில் ஆடு உருவாக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சிலா வடிவத்தில் நின்ற திருக்கோலத்தில் உள்ள முருகனுக்குப் பின்னால் ஆடு மிடுக்குடன் காணப்படுகிறது. ஆடு ஊர்தியுடன கூடிய முருகனது வடிவம் ஒரு அரிய கலைப்படைப்பாகும்.

## சிங்க ஊர்தியான்

பிரணவப் பொருளை அறியாப் பிரமமனைத்தண்டித்த முருகனது திருவுருவம் பிரம்ம சாத்தா எனப்படும்.

''விதிகளைப் பகுத்து அருமறை விளக்கிய விமலன்'' என்பது திருச்செந்தூர் முருகன் சிறைவிடந்தாதி. ''குமர தந்திரம்'' என்ற நூலில் விதிக்கப்பட்ட முருகனது 16 வடிவங்களில் இது ஒன்று. ஆனால் இந்த வடிவத்திற்கு எந்த வாகனத்தையும் ஆகமம் விதிக்கவில்லை. ''ஸ்ரீதத்வ நிதி''யில் சரவணபவன் என்ற வடிவிற்கு சிங்க வாகனம் விதிக்பட்டுள்ளதே தவிர சிங்கம் முருகனது வாகனம் என்பதற்கு புராண வரலாறு இருப்பதாகத் தெரியவில்லை. பின் இருகைகளில் அக்கமாலையும் கமண்டலமும் ஏந்தியுள்ள இங்குள்ள சிலர் வடிவமான பிரம சாத்தா வடிவிற்குப் பின்னால் சிங்கம் அமைக்கப்பட்டுள்ளது வேறு எங்கும் இல்லாத ஒன்றாகும்.

## குறுமுனிக்குத் தமிழ் உரைப்போன்

தமிழ் முனிவராம் அகத்தியனுக்குத் தமிழ்க் கடவுளாம் முருகர் தமிழ் கற்பிப்பது எத்தனை பொருத்தம்.



''மங்காத செந்தமிழ் குருமுனிக்கு உபதேசம் வைத்த மெய்ஞ் ஞான குருவே''

என்பது குமரேச சதகம். இத்தகையவடிவம் இங்குள்ள தூண் ஒன்றில் உருவாக்கப் பட்டுள்ளது. கால்கள் ஒன்றின் மேல் ஒன்றாகப் போடப்பட்ட நிலையில் முருகன் உட்கார்ந்து இருக்க, அவனுக்கு அருகில் குறுமுனி இருகைகளை கூப்பிய நிலையில் காணப்படுகிறான். முருகனது பின் இருகைகளில் ஆசிரியன் என்பதற்கு ஏற்ப அக்க மாலையும் கமண்டலமும் உருவாக்கப் பட்டுள்ளன.

## தனி நடனம்புரி சமர முருகன்


இறைவன் தன் முடிவிலாற்றலை உணர்த்த அரியபெரிய செயல்களைச் செய்தபின் அதன் எக்களிப்பில் நடனமிடுகிறான். முருகனது இத்தகைய நடனங்கள் துடிக்கூத்து, குடைக்கூத்து எனப்படும். இவை சிலப்பதிகாரத்தில் பேசப்பட்டுள்ளன. குடைக்கூத்து ஆடும் காரணத்தால் முருகன் ''சதுர நடனமூர்த்தி'' என்ற பெயரைப் பெறுகிறான். மேலும் குரவைக் கூத்து, வெறிக்கூத்து, வன்னிக் கூத்து என்பவையும் முருகனுடன் தொடர்பு கொண்டனவாம். இதற்கு ஆகமங்களில் விதிகள் ஏதும் இல்லை. சிவபெருமான் மற்றும் திருமாலின் நடன வடிவங்கள் காணப்படுவது போன்று, முருகனது நடன வடிவம் பொதுவாகக் காணப்படுவது இல்லை. அவனது அரிய நடன வடிவம் ஒன்று இங்குள்ள தூண் ஒன்றில் காணப்படுகிறது.

முருகனது வடிவங்களின் கலைக்கருவூலமாக இந்தக் கோயில் திகழ்கிறது.

**வாழ்க வையகம் வாழ்க வளமுடன்**

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே**

**—திருஞானசம்பந்தர்**



# கந்தவேள் கருணை

—திருமுருக கிருபானந்த வாரியார் (24)

அசமுகி சபதம் செய்து சென்றதும், இந்திராணி அப்போதைக்குத் தெளிவு பெற்றாலும், பதியின்றிக் கலை மானைப் பிரிந்த பிணை மானைப் போல மனம் பதைத்தாள், கணவன் கருதிச் சென்ற காரியம் வெற்றி பெற வேண்டும் என்று மீண்டும் தவம் செய்யலானாள்.

சீர்காழி நந்தவனத்தில் இந்திராணிக்கு நிகழ்ந்த ஆபத்தையெல்லாம் அறிந்த நாரத முனிவர் திருக் கயிலாய மலைக்கு விரைந்து சென்றார். சிவபெருமானைத் தரிசிப்பதற்கு உற்ற சமயத்தை எதிர் நோக்கியிருந்த இந்திரனிடம் நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தார். அதனைக் கேள்விப்பட்ட இந்திரன் தனது விதியை நினைத்து வருந்தினான். திருநந்தி தேவரை வணங்கி, ''அரனாரின் தரிசனத்துக்கு உற்ற சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டு நெடுங்காலம் காத்திருந்தோம். எங்கள் தீவினை காரணமாக இது வரை நினைத்த காரியம் கைகூடவில்லை. பூவுலகம் சென்று தவம் செய்ய எங்களுக்கு விடை தரவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். திருநந்தி தேவர் மனமுவந்து விடை கொடுத்தனுப்பினார்.

இந்திரன் மற்ற தேவர்களோடு சீர்காழிக்கு வந்தான். அயிராணியைக் காத்து நின்ற மகாகாளரை அன்புடன் தழுவிக் கொண்டு பல இனிய மொழிகளைக் கூறி ஐயனாரிடம் அனுப்பிவைத்தான். பின்னர், தவம் செய்து கொண்டிருந்த தன் தாரத்திடம் சென்று அவளது தாபத்தை நீக்கினான்.

சூராதியவுணர் படைகள் எந்த நொடியிலும் சீர்காழிக்கு வந்துவிடக் கூடிய ஆபத்தை இந்திராணி இந்திரனுக்கு உணர்த்தினாள். அவ்விடத்தைவிட்டு நீங்குவதே முறை என இந்திரன் கண்டான். இந்திராணியையும் மற்ற தேவர்களையும் அழைத்துக் கொண்டு மேரு மலையிற் போய் மறைந்திருந்தான்.

இந்திரனேயாயினும் வேறு யாராயினும் வினைப் பயன் விடாதல்லவா?

நிறைமதியை நிகர்த்த இரு வெண்கொற்றக் குடைகளின் நிழலில் சூரபன்மன் அரசு வீற்றிருந்தான். அருமைச் சகோதரர்கள் தாரகனும் சிங்கமுகனும் இரு பக்கங்களிலும் வீற்றிருந்தார்கள். புதல்வர்களும் அமைச்சர்களும் அருகில் வீற்றிருந்தார்கள். முன்பு தேவசபைக்கு அழகூட்டிக் கொண்டிருந்த ஊர்வசி, அரம்பை, திலோத்தமை முதலிய தேவ மாதர்கள் இப்போது அசுர அரசனின் சபாமண்டபத்தில் நடனமாடிக் கொண்டிருந்தனர். பஞ்சாங்கம் சொல்லுவதற்கு ஏற்ற சம



யத்தை எதிர் நோக்கிக் கொண்டு பிரம தேவர் நின்றுகொண்டிருந்தார். அசுரர்களின் கொடுமை களுக்குள்ளாகி நிர்ப்பந்தமாக ஆசி கூற வேண்டிய நிலையில் இருந்த முனிவர்களும் சூரனை வாழ்த்த சமயம் எதிர் பார்த்து ஒரு பக்கம் ஒதுங்கி நின் றார்கள். தீபத் தட்டுகள் ஏந்திய பெண்கள் பலர் சூரபன்மனுக்குப் போற்றி கூறினர். கின்னரரும், கிம்புருடரும், சித்தரும், கந்தருவரும் மங்கலம் ஓதிக் கொண்டிருந்தார்கள். திக்குப் பாலகர்கள் சூர பன்மனது வீரத்தையும் வெற்றியையும் துதித்துப் புகழ் பாடிக்கொண்டிருந்தனர். அசுரகுருவாகிய சுக்கிராசாரியர் மந்திரம் ஜபித்து அட்சதை தூவிச் சூரனை ஆசீர்வாதம் செய்து கொண்டிருந்தார்.

இத்துணைச் சிறப்புக்களுடன் சூரபன்மன் அரசு செய்து கொண்டிருந்தபோது அவனது அரு மைத் தங்கை அசமுகி வெட்டுண்ட கரங்களிலிருந்து உதிரம் சொட்ட, தோழி துன்முகியுடன் வீர மகேந்திர புரியின் கீழ்த்திசை வாயிலை அடைந் தாள். வீரமகேந்திரபுரி அழிய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்பதை முன் கூட்டியே தெரி விப்பது போலிருந்ததாம் அவளது வருகை.

தமது இளவரசியை இந்நிலையில் கண்ட அசு ரர்கள் ''பெரும் பலம் பொருந்திய இவளை இவ் வாறு கொடுமைப்படுத்தியவர் யார்'' என்று அதி சயமும் ஆறாச் சினமும் கொண்டனர்.

இவளது கைகளை வெட்டியவர் சிவபெரு மானோ? துர்க்கையோ? ஐயனாரோ? விநாய கரோ? சங்குகன்னரோ? குண்டோதரரோ? பானு கம்பரோ? அல்லது இந்திரனோ? இல்லாவிடில் திரு மாலே தானோ? என வியந்து பேசிக்கொண்டனர். தேவர்கள் யாவரும் சூரனுக்கு அடங்கிவிட்டதால் அவர்களால் அசமுகிக்கு தீங்கு நேர்ந்திருக்காது என எண்ணி, 'தவ சிரேஷ்டர்களிடம் போய் இவள் ஏதாவது சேஷ்டை செய்திருப்பாள். அவர்கள் சாபம் தந்திருப்பார்கள். அதனால் இவளுக்கு இப் படி நேர்ந்திருக்கலாம்' என்று சிலர் பேசிக்கொண் டனர். எனினும் இவ்வாறு அவளுக்குக் கொடுமை இழைத்தது யார் என்று அசமுகியைக் கேட்க யாருக்கும் துணிவில்லை.

நகர மாந்தர் அனைவரும் ஆச்சரியமும் ஆத் திரமும் உற்றிருக்க அசமுகி சூரபன்மன் வீற்றிருந்த அத்தாணி மண்டபத்தை அணுகினாள். சூரபன் மனின் அவைக்களத்தையடைந்ததும் அவளுடைய சீற்றமும், துயரமும் எல்லை மீறி விட்டன. பல வாறாகக் கதறினாள். தாய் தந்தையரை நினைத் துப் புலம்பித் தனக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்லி அழுதாள்.

''சகோதரர்களே! நீங்கள் இருந்துமா எனக்கு இந்தக் கதி? உங்களுக்காக அயிராணியைப் பிடித்து இழுத்து வர நினைத்ததன் மீதுதான் வீரமா காளன் கரங்களை வெட்டிவிட்டான். நான் அநாதை யாய் நின்ற போது நீங்கள் யாரும் வந்து என்னைக் காப்பாற்றவில்லையே? தேவர்களுக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டீர்களா? என் கரத்தை வெட்டிய போது தேவர்களை வென்று அடிமையாக்கிக் கொண்டோம் என்று பெருமை பேசிக்கொள்ளும் உங்கள் அகந்தையையும் மகாகாளன் அறுத்துவிட் டான். அது மட்டுமல்ல, இனி உங்களையுமே அழிக் கப் போகின்றான். நீங்கள் எனக்கு உடன் பிறந்த வர்களாக இருந்தும் என்ன பயன்?'' என்று ஓல மிட்டாள். தன் வாயினாலேயே அபசகுனம்போல் சோதரரின் அழிவைச் சொன்னாள்.

மருமகர்களை நோக்கினாள். ''நீங்கள் பராக் கிரமசாலிகளாக இருந்தும் என கையைத் துண்டித் தது யார் என்று கேட்காமல் இருக்கிறீர்களே ! பழி வாங்கப் புறப்படாமல் இருக்கிறீர்களே! இது என்ன கொடுமை''? என்று கூறி அழுதாள்.

அரக்கத்தனத்துடன் அறியாமையும் ஆறாத அவமான உணர்ச்சியும் கலந்ததால் அசமுகி தன்னை மறந்து தன் சுற்றத்தை நிந்தித்தாள். அவர்கள் அழிவுக்குத் தன் வாயாலேயே கட்டியம் கூறினாள்.

தாரகாசுரனை நோக்கி, ''அண்ணா, திருமால் விடுத்த சக்கரத்தை ஆரமாக அணிந்து கொண்ட தாங்கள், அருமைத் தங்கையின் கரம் வெட்டுண் டது என்ற பழியை ஆரமாகக் கொண்டுவிட்டீர் களே! உங்களுடைய பராக்கிரமம் எங்கே பறந்து விட்டது அண்ணா?'' என்று புலம்பினாள்.

சிங்கமுகாசுரனைப் பார்த்து, ''முன்பு ஒரு முறை தாங்கள் இந்திரனை ஐராவதத்தோடு தூக்கி எறிந்து உதைத்தீர்களே ! இன்று தேவரின் ஏவ லாள் என் கையை வெட்டியபோது உங்கள் வீரம் எங்கு சென்றிருந்தது?'' என்று கத்தினாள்.

கடைசியாக அசமுகி, அசுர வேந்தனாகிய சூரபன்மனிடம் சென்றாள். அண்ணா ! அண்டங் களுக்கெல்லாம் அதிபதியான உங்களைக் கண்டு தேவர்கள் யாவரும் அஞ்சி நடுங்குவார்கள். அப் படியிருக்க, அவர்களின் ஏவலாள் ஒருவன் உங் களைக் குறித்துச் சிறிதும் அஞ்சவில்லை. அவன் அஞ்சாததும் நியாயம்தான். எனக்கு இத்தகைய கோரத்தை இழைத்த பின்னும் அவன் கவலை

யின்றி உயிர் வாழுகிறான் அல்லவா? முன்பு அகத்திய முனிவன் என் குமாரர்களான வில்வலனையும் வாதாபியையும் கொன்றான். அவனும் உயிருடன் தான் இருக்கிறான். எனக்கு உங்களால் ஆதரவு இல்லை. கையிழந்த நான் தன்கையே தனக்குதவி என்றும் இனி வாழ முடியாது. நான் உயிருடன் இருப்பதைவிட இறப்பதே மேல்'' என்று கூறிச் சூரபன்மனின் கால்களில் விழுந்து சகடக்கால் போல் உருண்டு கதறினாள்.

அசமுகியின் கண்களிலிருந்து தாரை தாரையாகப் பெருகிய கண்ணீர் சூரபன்மனின் கால்களில் விழுந்ததும், அவனுள்ளிருந்த கோபத் தீக்குத் தைலம் வார்த்தது போல் அவனது கண்களில் பொறி பறந்தது. அசுரர்களிடம் சகோதர பாசத்துக்குக் குறைவே கிடையாது.

இந்திராணியைத் தனக்கென்று கவர்ந்து வந்த போதுதான் தங்கையின் கை வெட்டப்பட்டது என்பதையறிந்த சூரபன்மனின் கண்கள் நெருப்பைக் கக்கின. வாய் புகையை உமிழ்ந்தது. மூக்கு, விஷ வாயுவைக் கக்கியது, பற்களால் உதட்டை கடித்துக் கொண்டான். அண்டங்களெல்லாம் வெடித்து விடுவது போலப் பெருஞ் சிரிப்புடன் சிரித்தான். அவனது புருவங்கள் துள்ளின, உடல் வியர்த்து விட்டது. சூரபன்மனின் சீற்றத்தைக் கண்ட முனிவர்கள் மூலைக்கொருவராக வெருண்டு ஓடினார்கள். திசைக்காப்பாளர்கள் எந்தத் திசை நோக்கிச் செல்கிறோம் என்பதை அறியாது தலை தெறிக்க ஓடினர். நடனமாடிக் கொண்டிருந்த தேவமாதர்கள் நடனமாடியபடியே ஓடினார்கள். மலைகளும் கடல்களும் கூட சூரனின் கோபாவேசத்தை கண்டு நடுக்கம் கொண்டன. விண்ணும் மண்ணும் விலுவிலுத்தன.

''தேவர்களின் ஏவலாள் ஒருவன் நம் வலிமை மிக்க சகோதரியின் கையை வெட்டினான் என்றால், மனிதர்களுக்கும் இனி நாம் பயந்து வாழும் காலம் வந்து விடும் போல் இருக்கிறதே! இந்திரனை அற்பமாக நினைத்துச் சிறைக்குள் போடாமல் விட்டேன். அவன் கூரையில் ஒளித்து வைத்திருந்த நெருப்புப் பொறியாகி விட்டான். அசமுகியின் கரத்தை வெட்டியது என அங்கத்தை வெட்டியதுபோல்இருக்கிறது. தம்பியராகிய நீங்கள் இருக்க மக்களிருக்க, கோடானுகோடி சேனையிருக்க, தெய்வாஸ்திரங்கள் இருக்க இந்திரஞாலத்தேரும் இருக்க, இதோ நானும் திரிபுவனசக்கரவர்த்தி என்ற பட்டத்துடன் இருக்கிறேன். மலை போன்ற பஞ்சுப் பொதியை ஒரு சிறு தீப்பொறி அழிப்பது போல இவள் கையிலிருந்து சிந்தும் உதிரத்துளிகள் என மாபெரும் புகழையும் எரித்துச் சாம்பலாக்கிவிட்டதே! இந்தப் பழி என்றும் என்னைவிட்டு நீங்காதே! அசமுகி துன்பப்படுவதா? அதனைக் கண்டு என் உயிர் பொறுப்பதா? நன்று நன்று என் அரசியல்'' என்று கூறி நகைத்தான்.

சூரனின் சொற்களைக் கேட்டதும் அவனது புதல்வன் பானுகோபன் கோபாவேசத்தோடு எழுந்தான். தந்தையை வணங்கினான். ''அப்பா! நமது ஏவலால் வருந்தி இளைத்த தேவராஜனாகிய இந்திரனோ எங்கோ மறைந்தான். அவ்வாறிருக்க, தேவர்களில் ஒருவன் கரத்தைத் துண்டித்தான் என்பது மலடி மகன் வானத்தில் பூத்த தாமரையை கையால் பிடித்தான் என்பது போல் அல்லவா இருக்கிறது? இதனை ஆராய வேண்டும். இப்போதே சீர்காழி சென்று அத்தையின் கரத்தை வெட்டியவனையும், இந்திராணியையும், இந்திரனையும் மற்ற தேவர்களையும் சிறை பிடித்து வருகிறேன். அவர்கள் அங்கிருந்து மறைந்து விட்டாலும் தேவலோகம் சென்று அதனைக் கொளுத்தித் தேடிப் பார்க்கின்றேன். அங்கு எஞ்சியுள்ள தேவர்களையும், அரம்பையர்களையும் பிடித்துக் கொண்டு வருகிறேன். எனக்கு உத்தரவு கொடுங்கள்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

''படையுடன் செல்க'' என்று பானுகோபனுக்கு அனுமதி கொடுத்தான் சூரபன்மன், பானுகோபனுக்கு இடம் காட்டுவதற்காகத் துன்முகியை அனுப்பி வைத்தான். பானுகோபன் தந்தையையும் சிறிய தந்தையையும் வணங்கிப் புறப்பட்டான்.

சூரபன்மன் நான்முகனைக் கூப்பிட்டான். படைப்புக் கடவுள் சூரபன்மன் முன் வந்ததும் திதி, வாரம் கூறத் தொடங்கினார். சூரபன்மன், ''உன்னை நாம் அழைத்தது இதற்காக அல்ல'' என்று அதட்டி விட்டு, அசமுகியின் வெட்டுண்ட கையை விரைந்து கூடச் செய்வாய் என உத்திர விட்டான். நொடிப்பொழுதில் அவ்வாறே செய்தார் படைப்புக் கடவுள்.

சூரபன்மன் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் அழைத்து வரச் செய்தான். ''என் தங்கையின் கையை வெட்டியவன் யார் என்று ஆகாயத்தில் திரியும் உங்களுக்குத் தெரியாதா? இளவரசியின் கரம் துண்டிக்கப்படுவதைப் பார்த்தும் நீங்கள் வாளாயிருந்தது ஏன்? உங்கள் ராஜ விசுவாசம் இதுதானா? என்று கடுகடுத்துப் பேசி, அவர்களை எல்லாம் சிறையில் அடைத்தான்.

'வாயுவே! நீ எங்கும் நிறைந்திருக்கின்றாய். நீ இல்லாத இடத்தில் எந்த உயிரும் ஒளிந்திருக்க முடியாது. அப்படியிருக்க, என் தங்கையின் கையை ஒரு வானவன் வெட்டியதைப் பார்த்தும் நீ ஏன் நம்மிடம் வந்து தெரிவிக்கவில்லை?'' என்று முழக்கமிட்டான். வாயு பகவான் வாய் திறவாது நின்றார், அவரையும் சிறைக்குள் தள்ளினான் அசுரன்.

பின்னர், வருஷம், இருது, மாதம் முதலிய காலவரையறைக்கு உரிய தெய்வங்களையும் சிறையில் அடைத்தான்.

பூவுலகில் உள்ள அரசர்களையெல்லாம் அழைத்த சூரபன்மன் ''விண்ணுலகிலிருந்து ஓடி மண்ணுலகில் மறைந்து வாழுகின்ற இந்திரனுக்கு உணராமல் நீங்கள் மயங்கிக் கிடந்தீர்களே ஏன்'' என்று கோபாவேசமாக கேட்டான். தன் தங்கையின் கரம் வெட்டுண்டதை அவர்கள் தடுக்காதிருந்ததற்குப் பிரதியாக சில அரசர்களின் நாவையும், நாசியையும், சிலரது செவியையும் அறுத்தான். வேறு சிலரின் கால்களை வெட்டினான் . சில அரசர்களின் சிரத்தையே சேதம் செய்தான்.

சூரபன்மன் தரும் தண்டனை விதிப் படலம் ஒருவாறாக ஓய்ந்தது. அவனது தம்பியரும் விடை பெற்றார்கள். பிரமதேவர் சிறிது தயங்கி நின்றார். பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ''ஒரு சிறு கோரிக்கை! சூரியனும், நட்சத்திரங்களும் மற்ற காலக் கடவுள்களும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யா விட்டால் பிரபஞ்சம் இயங்காது. ஆகவே சிறையில் அடைத்துள்ள அவர்களை விடுதலை செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். எக்காரணம் பற்றியோ வேண்டுகோளுக்குச் சூரனும் இணங்கினான். சூரிய சந்திரனையும் விடுதலை செய்து ''உங்களை விட்டுவிட்டேன். இனி இந்திரனுடன் சேராமல் நம் கட்டளைப்படி நடந்து கொள்ள வேண்டும்'' என்று உத்தரவிட்டான்.

''தங்கள் உத்தரவுப்படியே செய்கிறோம்'' என்று கூறி அகிலாண்டத்துச் சக்திகளும் அசுரனின் அடிபணிந்து வெளியேறின.

(தொடரும்)


சித்திர பாரதம்
கதை. செவ்வேள்
வடிவம்:
படம்: M.N ராஜா
சாலகோத்திர முனிவனத்தில் இடும்பி கடோற்கஜனைப் பெறுகிறாள்.
தந்தையே! வணக்கம். அழைக்கும் போது வருகிறேன். அன்னையுடன் இடும்பவனம் செல்ல அனுமதியுங்கள்.
ஆகட்டும் மகனே
பாண்டவர்கள் மறையவர் வேடம் பூண்டு வேத்-திரகீயம் எனும் ஊர் செல்கிறார்கள்.
ஒரு நாள் பாண்டவர்கள் தங்கியிருக்கும் வீட்டு மறையவனும் அவன் மனைவியும் "ஓ" என்று அழுகிறார்கள்.
ஏன் அழுகிறீர்கள் விவரம் சொன்னால் உதவலாம் அல்-லவா?
பகன் எனும் அரக்கன் நினைத்தபோதெல்லாம் ஊருக்குள் வந்து எங்களை நாசப் படுத்திக் கொண்டிருந்தான்.



நீ ஊருக்குள் வராதே. நாங்களே நாளுக்கு ஒரு வீடாக முறை வைத்து ஒரு வண்டிச் சோறும் ஒராளும் உனக்கு உணவாகத் தருகிறோம்
இன்று எங்கள் முறை. எங்களுக்கு இருப்பதோ ஒரே மகன் அதனை எண்ணியே அழுகிறோம்.
அழவேண்டாம். என் மக்களில் ஒருவனை இன்று அனுப்பலாம். நீங்கள் விருந்து தயார் செய்யுங்கள்.
மலை போன்ற சோற்றுத் திரளை ஒரு வண்டியிலும் பதார்த்த வகைகளை மற்றொரு வண்டியிலுமாக ஏற்றிக்கொண்டு உற்சாகமாகப் புறப்படுகிறான் பீமன்.
பகன் இருக்கும் வனம் சேரும் முன் ஆற்றங்கரை ஓரமாய் அமர்ந்து தானே வண்டி உணவையும் ஆசை தீர வாரி வாரி உண்ணுகிறான்.
அடேய்! புலிக்கு வைத்த இறைச்சியை உண்ணும் பூனை நீயாரடா?
கை கழுவி வருவதற்குள் ஏனடா உனக்கு அவசரம்? வா இடும்பன் போன நரகத்திற்கு உன்னையும் அனுப்பிவைக்கிறேன்.
சிங்கமெனப் பாயும் பீமன் பகனை மோது மோதென்று மோதி கழுத்தைத் திருகிக் கொன்று விடுகிறான். பகனின் வெற்றுடலை ஊருக்குக் கொண்டு வருகிறான் பீமன்



# மாணிக்கவாசகரின் திருவெம்பாவை

—வித்யாதீர்த்ததாசன்—

## என்ன ஆனந்த அனுபவம்

சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடிக் களித்துக் குளிக்கும் பெண்கள் ஒரு பெண்ணின் பக்திப் பரவச மான நிலை கண்டு இத்தகைய உயர்ந்த நிலை தமக்கு வரவில்லையே என எண்ணிப்பாடும் பாசுரம் இது.

பேசாமலே இருக்கும் இவள் திடீரென வாய் திறந்து எம்பெருமானே! எனப் பல முறை கூவு வாள். ஒரு முறை கூட வேறு விஷயம் பேசமாட் டாள். யாவருக்கும் பொதுவான நம் பெருமானை அன்பின்மிகுதியால் எம்பெருமான்தன் வசமாகிப போற்றுகிறாள். “எம்பெருமான்'' என வாக்கினால் பாடுகிறாள். மனமகிழ்ச்சியால் ஓயாது ஆனந்தக் கண்ணீர் விடுகிறாள். மனத்தால் நினைக்க மனம் குளிர்ந்து ஆனந்தக்கண்ணீராக வருகிறது போலும். சிவபெருமானை எண்ணிப் பூமியில் விழுந்து வணங் குகிறாள். (காயம்-உடல்) இது காயத்தால் செய் யும் பக்தி. சிவபெருமானைத் தவிர வேறு எவ ரையும் தொழமாட்டாள். பிரமபதவியோ, திரு மாலின் பதவியோ, இந்திரபதவியோ வேண்டாம். உன்னைத் தவிர வேறு எவரையும் வணங்க மாட் டேன் என சிவபெருமானை நோக்கிப் பேசுகிறாள், கொள்ளேன்புரந்தரன்மால்அயன்வாழ்வு-உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே என்ற நிலை. பைத்தியமாயிருந்தால் எல்லோரை யும் வணங்குவாள். அல்லது எவரையுமே வணங்க மாட்டாள். இவள் சிவபெருமானுக்கு மட்டும் பக்தி செய்கிறாள். சக்கரவர்த்தி என்பவன் தனக்கு அனேக அரசர்கள் கப்பம் கட்ட வாழ்பவன். சிவ பெருமானான பேரரசன் என்னும் தெய்வம் தனக் குக் கீழ் அனேக தெய்வங்களை உள்ளவன். இத்த கையவனுக்குப் பித்தாகி விட்டாள்! பேரரையர்க்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும் என அதிசயிக் கின்றனர். இத்தகைய பக்திதான் எத்தகைய பெரு மையுள்ளது.

இப்படி இவளைப் பித்தாக யார் செய்ய முடி யும்? வேறு தெய்வங்கள் இவ்வாறு ஆட் கொள்ள முடியாது. ஏனெனில் சிவபெருமான் ஒருவரால் தான் ஆணவத்தைத் தீர்க்கும் ஆற்றல் உண்டு. ''நான்'' என்பது ஒழிந்தால்தான் பக்திப் பித்தாக முடியும். தேவர்கள் தம் அளவிலே ''நான்'' என்ற ஆணவம் உடையவர்கள். இறைவனை என்னால் காணமுடியும் என அடிமுடி தேடிச் சென்றதே ஆணவம்தானே! அவளது கண்ணீர் பக்தி உணர்ச் சியை வெளிக் காட்டுகிறது. மனம் சிவபெருமானின் திருவடியை வருடிக் கொண்டிருக்கிறது.

தூயவெண்ணீறு துதைந்த பொன் மேனியும்,
தாழ்வடமும்,
நாயகன் சேவடிதைவரும் சிந்தையும், நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்பு நீர் பொழிகண்ணும், பதிகச்
செஞ்சொல்
மேய செவ்வாயுமுடையார் புகுந்தார் வீதியுள்ளே..

எனுமாறு பக்தி யுருவாகவே மாறிவிட்டாள் போலும்.

அவள் தனது மனம் வாக்கு, உடல் யாவை யும் இறைவனிடம் அர்ப்பணித்து கண்பனிப்புக் குளிர்ந்து விளங்குகிறாள். அவள் போல் நாம் செய்ய முடியாவிட்டாலும், அவளது நிலை கண்டு மகிழ்ச்சியால் நம் மார்பு விம்மி வாயால் பாடு வோம். அவள் ஆனந்தக் கண்ணீரில் ஆடினாள். நாம் இந்தப் புண்ணியத் தண்ணீரில் ஆடுவோம்'' என்கிறார்கள்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றெ நம்
பெருமான்
சீரொருகால் வாயோவாள்; சித்தம் களி கூர
நீரொரு கால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையால் விண்ணோரைத்
தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்தாடேலோர்
எம்பாவாய்
திருவெம்-15.

## அருள் மழை பொழிந்தருள்க!

மழைபெய்வதையும் அந்த நீர் ஆறாகப் பெரு கிக் கடலில் கலப்பதையும் நம் முன்னோர்கள் தெய்வீகக் காட்சிகளாகக் கண்டார்கள். வெண் மையான திருநீறணிந்த சிவபெருமான் போல

புறப்பட்ட மேகம் கடலிலுள்ள நீரையெல்லாம் குடித்து திருமகள் நாயகனான திருமால் மாதிரி வந்தது எனச் சூல் கொண்ட மேகத்தைக் கம்பன் பாடினான்.

வெண்ணிறமுள்ள மேகம் வெண்ணிறமுள்ள கலைமகள் மாதிரி புறப்பட்டு, கடல் நீரை உண்டு கரிய நிறமுள்ள திருமாலின் தங்கையான மலை மகள் எனும் பார்வதியைப் போல் கருமேகமாயிற்று என்னும் நைடதம். வெண்ணிறமணிந்த நம சிவ பெருமான் மாதிரி புறப்பட்ட மேகம் நீரை உறிஞ்சி அம்மை பார்வதி மாதிரி கரிய நிறமடைந்தது என்பர் திருவிளையாடல் பாடிய பரஞ்சோதி மாமுனிவர். சிவபெருமானைப் போல திருமாலும் வெண்ணிறமாகத்தான் இருந்தார். ஆனால் பாற் கடல் கடையும் போது பொங்கிய ஆலகாலமெனும் நஞ்சுஅவரது உடலைத் தாக்கி கருமையாகிவிட்டது என்பது புராண வரலாறு. பாற்கடல் கடைவதற்கு முன் இருந்த திருமால் மாதிரி வெள்ளையாக இருந்த மேகம் கடல் கடைந்தபின் கரிய திருமேனி கொண்ட திருமேனி போல் கறுத்துவிட்டது என் பர் காஞ்சிபுராணமுடையார்.

வெண்மேகம் கடல்நீரை முகந்து கரிய மேக மாகிறது. கரிய மேகத்தை எங்கள் அம்மை என் கின்றனர். கைம்மாறு கருதாது உதவும் மேகத் தைத் தனது குழந்தைகளுக்காக எவ்விதமான கைம்மாறு கருதாது உதவும் அம்மைக்கு ஒப்பிடு கின்றார். நம்மை ஆட்கொண்டு அனாதையாக இருந்த அடியார்களை ஆட்கொண்ட அம்மையின் இடைபோன்று மின்ன வேண்டும் என்கின்றார். தனது குழந்தைக்கு ஒரு ஆபத்து என்று ஓடிவரும் போது, உலகமாதாவான அன்னையின் சதங்கை கள் சப்திப்பதுபோல இடித்துவர வேண்டும் என அழைக்கின்றனர். இடி சத்தம் பயங்கரமில்லாது ஓடிவரும் அன்னையின் சிலம்புபோல் இன்பமளிக் கும் முறையிலே வரவேண்டுமென்பது குறிப்பு. வானவில் மழைபொழியும்போது சூரியனுக்கு எதிர்த்திசையில் தோன்றும். அருமையான மேகம் சிவபெருமானான சூரியனெதிரில் கருணை மழை பொழிகின்றது. அம்மையின் புருவம் மாதிரி வான வில்லிட்டு வரவேண்டும் என்கின்றனர். சுருதியும் லயமும் பிரியாது தண்ணீரும் குளிர்ச்சியும், பாலும் சுவையும்,மணியும் ஒளியும், மலரும் மணமும் பிரியா தவை. அதுபோல் இறைவனும் இறைவியும் பிரி யவே மாட்டார்கள். இத்தகைய அம்மையப்பர் இன்னருள் சுரப்பது போல மழை பொழிய வேண் டும் என மேகத்தைக் கேட்கின்றனர்.

நமது பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப உயிரை யும் உடலையும் கூட்டிச் செயற்படுத்துவதால் கிரியாசக்தியை உடையாள் என்றும், சிற்றின்பத் தைக் காட்டிலும் பேரின்பம் பெரியது பெருமையை உடையது என்பதை அறிவுறுத்திய ஞானசக்தியை - எம்மையாளுடையாள் என்றும், நம்மைத்தன் விருப்பம். போல் இழுத்துச் சென்று ஆட்கொள்ளும் இச்சாசக்தியை எம்பிராட்டி என் றும், இவ்வளவும் செய்து நம் கண்ணுக்குத் தெரி யாது மறைந்து நிற்கும் (ஆதிசக்தி) திரோதன சக்தியை-நம் தம்மையாளுடையாள் என்றும் நம் பாவ புண்ணியங்கள் நீங்கியபின் சிவானந்த மளிக் கும் அம்மையின் அருள்நிலை அடைமொழி ஒன்றும் இல்லாது பராசக்தியை அவள் என்றும் குறிப்பிட் டார். மழைவேண்டிப் பாடியவர்கள் மழையிலும் அம்மையப்பனைக் கண்டுவிட்டனர்.

அம்மையப்பர்கள் நமது வாழ்விலும் அருள் மழை பொழிய வேண்டுவோமாக.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப்பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மையாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னியவள் நமக்கும் முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பா
வாய். திருவெம்-16.

## நம்மை நோக்கி வந்தருள்வன்!

பிரமபதமோ, திருமாலின் பதமோ எது வேண்டு மானாலும் அருளும் தன்மையுடையவன் சிவபெரு மான். "வேதன் மால் பதவியும் வேண்டியவர்கட்கு அருள்நாதன்" என்பர். திருமால் தனது கண்ணை தோண்டிச் சிவபெருமானுக்கு அருச்சனை புரிந்த காரணமாக அவருக்கு ஒரு சக்கரம் அருளினார். திரிபுரத்தை எரிக்கச் சிவபெருமான் புறப்பட்ட போது பிரமன் சாரதியானார். பாற்கடல் கடைந்த போது பொங்கிவந்த ஆலகால விடத்தை ஏற்றுக் கொண்டு தேவர்கள் அமுதத்தை அடைந்து நரை திரை மூப்பு இல்லாது காத்தார். இவ்வளவு பேருக்கும் கிடைக்காத பேரின்பம் நமக்கு அருள் பவர் சிவபெருமான்.

பால் நன்றாக இருப்பதற்காகப் பாத்திரத் தைச் சுத்தப் படுத்துவதுபோல் - நம் பாவ புண் ணியங்களை நீக்கி - நம் குற்றங்களை நீக்கி நம் மைக் காக்க இங்கு (பூவுலகம்) வருவான் என்றார்.

இளையான் குடி மாற நாயனார் வீட்டில் விருந்துண்ண வந்தார். திருநீலகண்ட நாயனார் வீட்டிற்குக் கணவனையும், மனைவியையும் சேர்க்க வந்தார். ஏழைப்பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக வந்தார். இத்தகைய வலிய ஆட்கொள்ளும் எளிய கருணையை இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந் தருளி எனக் குறித்தார். 'எழுந்தருளி' என்ற சொல் சென்ற காலம் நிகழ் காலம், வருங்காலம் மூன்றையும் குறித்து என்றும் வந்தருள்பவன் எனக் காட்டும். சிவந்த தன் திருவடிகளையளிப்பவன் எனக்கூறித் திருவடி தீட்சை செய்பவன் என்றார். செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன்; பொற்பாதம் என அவனது அருட்டிறத்தைக் குறித் தார். சேவகன் என்றால் வீரன். எவர் வந்தாலும் பேதம் பாராது அருளும் வீரன் என்பதுடன் தொண்டருக்குச் சேவை செய்பவனாகக் கூட வருபவன் - விறகுத் தலையனாகவும், மாணிக்க வியாபாரியாகவும் வந்தவன் என எளிமையையும் காட்டினார். கருணைப்பார்வை காட்டி சட்சு தீட்சை செய்பவன். தேவர்கட்குக் கிடைத்த அமு தைக் காட்டிலும் உயர்ந்த ஆரமுது என்றார் நம் பெருமானைப்பாடி நலம்பெற்று அவன் திருவடி களான தாமரைகளைப் பெறத் தாமரைகள் நிறைந்த குளத்தில் குளித்து அவனருள் பெறுவோம் என்கின்றனர்.

செங்கணவன் பால் திசைமுகன் பால் தேவர்கள்
பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாகக்
கொங்குண் கருங்குழலி நம் தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கணரசை அடியேங்கட்கு ஆரமுதை
தங்கள் பெருமானை நாடி நலம் திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோரெம்
பாவாய். திருவெம்-17

# பாம்பு விரும்பிய பரமனின் நடனம்



**'நடராசன் அடிமை'**

ஒரு சமயம் திருமால் தனது பாம்பு படுக்கையில் துயில் கொள்ளாது அமர்ந்திருந்தபோது படுக்கையான ஆதிசேடன் என்னும் பாம்பரசன் திருமால் சிறிது கனமாக இருப்பதாக எண்ணி ''பெருமானே! ஏன் இவ்வாறு அமர்ந்த கோலத்தில் இருக்கின்றீர்கள். தங்கள் திருமேனி வழக்கமாக இல்லாது சிறிது அதிக பாரமாக இருப்பது போல் தோன்றுகின்றதே? என்றார்.

திருமால் ''பாம்பரச! தாருகா வனத்திலுள்ள முனிவர்களும் அவர்களது தேவிமாரும் தாம் எதற்கும் மயங்காதவர்கள் எனச் சிறிது கர்வம் கொண்டனர். சிவபெருமான் ஒரு அழகிய ஆண் வேடம் பூண்டு, என்னையும் எவரும் மயங்கும்படி ஒரு மோகினி மடந்தை உருவம் கொள்ளச் செய்து இருவரும் தாருகாவனம் சென்ற காலத்து முனிவர்கள் எனது வடிவங் கண்டு மயங்க, அவர் தம் மனைவியர் சிவபெருமானது வடிவு கண்டு மயங்கினர். சிறிது நேரம் கழித்து உண்மையை உணர்ந்த முனிவர் பெருமக்கள் சிவபெருமானைப் பலவாறு சபிக்க அவர்களது சாபங்கள் பயனற்றுப் போயின. அவர்கள் அனைவரும் ஒரு வேள்வி செய்து, வேள்வித் தீயினின்று தோன்றிய புலியை சிவபெருமான் மீது ஏவினர். இறைவன் புலியை உரித்து அதன் தோலை ஆடையாகக் கொண்டார். பிறகு பூதங்களை ஏவ, அவைகள் சிவபெருமானுக்குக் கணங்களாயின, அவர்கள் ஏவிய பாம்புகளைத் தனக்கு அணிகலன்களாகவும், முனிவர்கள் ஏவிய ஒரு பயங்கரமான முயலகன் என்ற உருவம் ஒன்றை இறைவன் தன் திருவடியின் கீழ் அழுத்தி ஏறி, பின்னர் அவர்கள் தீயையே ஏவ அத்தீயினைச் சிவபெருமான் தன் கரத்தினில் ஏற்றனர். முனிவர்கள் ஏவிய மந்திரங்கள் யாவும் சிவபெருமானது திருவடிச் சிலம்புகளாக மாறின. இவை யாவையும் ஏற்ற சிவபெருமான் நடனமாடினார். உலகத்திலுள்ள ஆணவ மலம் பூராவும் முயலகன் மீது செலுத்தி அவன் மீது ஏறி ஆடினார். நான் நடுங்கினேன். ''அஞ்சாதே'' எனக் கூறி எனக்கு இடப வாகனத்தில் அம்மையுடன் காட்சியருளினார். முனிவர்களும் இறைவனது ஆடிய திருக்கோலம் கண்டு அச்சம் நீங்கி மகிழ,இறைவன் மறைந்தனர். அத்தகைய ஆடலைக் கண்ட களிப்பில் உறக்கம் வரவில்லை. உடலும் களிப்பு மிகுதியால் சிறிது அதிக பாரமாகி விட்டது என நினைக்கிறேன்'' என்றார்.

இவ் வரலாறு கேட்ட அரவரசனான ஆதிசேடனும் அந்த ஆனந்த நடனக் காட்சி காண விரும்பியபோது. திருமால் ''கைலை சென்று சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அந்த நடனக் காட்சியைப் காண வரம் கேள்'' என்றார். ஆதிசேடன் கயிலைமலை சென்று தவம் செய்யலானார்.

ஆதிசேடன் தன் மூச்சை நிறுத்திக் கொண்டார். தனது இயற்கை உணவான காற்றைக் கூட ஏற்கவில்லை. இறைவனது திரு நடனம் காண வேண்டிய தனது கண்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுகிறாரோ என எண்ணும்படி தன் பார்வையைச் சூரிய ஒளியை நோக்கியே செலுத்தினார். பல நாட்கள் கழிந்தன.

''தவமிக முயலும்போது தன் உயிர்ப்பு
உமிழ்வதன்றி
பவனெனும் உணவு கொள்ளான், பல பகல் அகல்
வும் பாரான்.
சிவனடி காணும் கண்கள் திப்பியமாக்குவான் போல்
உவமனில் கதிரோன உட்புக்கு உருக நேரோட
வைத்தான்''.

வெகு காலம் தவம் செய்த ஆதிசேடன் எதிரில் இறைவன் பிரம தேவனைப் போல் கோலங் கொண்டு அன்னவாகனத்தில் வந்து ''உனக்கு இந்திர லோகம் அட்டமாசித்தி எது கேட்டாலும் தருகுவோம்''. என்றார். ''நான் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யத் தாங்கள் வந்திருக்கின்றீர்களே'' என ஆதிசேடன் கூற, பிரமனாக வந்தவர் ''உனக்கு வேண்டுவதை எவர் கொடுத்தால் என்ன? வேண்டுவதைக் கேள்''! என்றார். ''இறைவனது நடனக் கோலம் காண வேணுமென்பது என் விருப்பம். பிற எதற்கு? அட்டாமாசித்தியும் இந்திரபதவியும் வேண்டாம்'' என்றார் ஆதிசேடன். ''முடியாத ஒன்று வேண்டுமென ஆசை கொண்டு ஏன வீண் முயற்சி செய்கிறாய்.'' என்றார் இறைவன். ஆதிசேடன் ''எப்பொழுதும் ஆனந்தத் தாண்டவம் புரியும் இறைவன் அந்தக் கோலத்தில் தரிசனம் அளிக்க மாட்டார் என்கின்றீர்களே! எத்தனை காலமானால் என்ன? இறந்தாலும் மீண்டும் வந்து பிறந்து இன்னொரு உடலின் மூலமாகவாவது அவ்வழகிய நடனத் திருகோலத்தைத் தரிசிப்பேன்'' எனப் பிடிவாதமாகப் பதிலிறுத்தார். இவரது அன்பு கண்ட இறைவன் மகிழ்ந்து காட்சி கொடுத்தார்.

அண்டனே போற்றி! ஆண்ட அமலனே போற்றி!
திங்கள்
துண்டனே போற்றி! நாயேன் சொன்னவை
பொறுப்பாய்போற்றி
கொண்டல் நேர் கண்டா போற்றி! கூத்தனே
போற்றி! போற்றி!
ஆண்டிட வேண்டி வந்த அமலனே போறறி!
போற்றி!

என மனமுருகிப் புகழ்ந்து வணங்கினார்.

ஆதி சேடனது தவத்தையும் பக்தியையும் மெச்சிய இறைவன் ''இவ்வளவு கடுந்தவம் செய்தவருக்குக் கட்டாயம் நமது காட்சி கிடைக்கும் என உலகம் அறியட்டும். உனக்கு நடனக் காட்சி அளிப்போம் கவலைவிடு'' என ஆதி சேடனைத் தீண்டி அணைத்துப் பரிச தீட்சை (கையால் தீண்டப் பெறும் பேறு) அளித்தனர்.

''ஆதிசேட! தாருக வனத்தில் நாம் ஆடும் போது அந்த இடம் நம் பாரத்தைத் தாங்க

முடியவில்லை. ஏனெனில் அது பூமிக்கு மத்தியில் இல்லாததே காரணம். அதே போல் கயிலையிலும் உனக்கு அக்காட்சி காட்ட இயலாது. இக்காட்சி யளிக்கத்தக்க ஞான சபையொன்று உண்டு. தில்லை வனம் என்ற தலத்தில் மூலமான சுயம்பு (தானாகத் தோன்றும்) லிங்கம் ஒன்று உண்டு. அந்த லிங்கத்திற்குத் தென்பால் ஒரு அம்பலம் உண்டு. அவ்விடத்தில் இடைவிடாது நடனமாடுவோம். அத்தகைய சிதம்பரம் என்ற தலத்தைக் காண்பவர் பெரும் புண்ணியவான்கள். ஆதிசேட! நஞ்சுமிழ் வாயும், தீப்போன்ற கண்களும் ஆயிரம் தலைகளும் உள்ள உன் உண்மை உருவுடன் சென்றால் உலகத்தவர் அஞ்சுவர். உன்னை மகனாக அடையவேண்டுமென்று அத்திரி முனிவரும் அனுசூயா தேவியும் தவம் புரிகின்றனர். திருமாலும் அதற்கு இணங்குவார். நீயோ பிறப்பதற்கு அஞ்சுவாய். எனவே அனுசூயா தேவி நீராடும் காலத்து அவள் திருக்கரத்தில் ஐந்து தலையுள்ள சிறு பாம்பாக அவள் திருக்கரத்தில் வா. அவ்வம்மை பயந்து நடுங்கி உன்னைக் கையிலிருந்து உதறிக் கீழேவிட அவ்வம்மையின் பாதத்தில் விழுவாய். பதஞ்சலி எனப் பெயர் பெறுவாய்.

அரி அவர்க்கு உன்னை ஈந்தான்: அன்று நீ பிறத்தல் அஞ்சி
இருதுவாய்ப் புனிதையாய் வந்து ஏற்ற அஞ்ச சலிப்பாலெய்தி
மருவும் ஐந்தலை ஓர் பால மாசுணமாகக் கண்டு
பரிவினால் பயத்தால் நீப்பப் பதஞ்சலியான பண்பால்

இத்தகைய பதஞ்சலி என்ற உடலை எடுத்துக் கொண்டு நாகலோகத்திலுள்ள ஒரு மலைக்குப் பக்கத்திலுள்ள பிலத் துவாரம் வழியாக மேலேறி வந்தால் நாம் உள்ள இடம் சேர்வாய். அவ்விடத்தில் நம் நர்த்தனம் காண வேண்டுமென்று ஆவலுடன் தினமும் பூசனை புரிந்து கொண்டு புலிக்கால் முனிவர் (வியாக்ரபாதர்) என்பவர் உள்ளார். அவருடன் நீ அங்கிரு. ஒரு தை மாதம் வியாழக்கிழமை பூச நட்சத்திரத்தில் நர்த்தனக் காட்சியளிப்போம்'' எனக் கூறி இறைவன் மறைந்தார்.

ஆதிசேடன் பாதாளம் சென்று வாசுகி, தட்சன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் முதலான நாகலோகவாசிகளான பெரியோர்களால் எதிர் கொண்டு அழைக்கப்பட்டு, பாதாளலோகத்திலிருந்து பிலத்துவாரம் வழியாக மேலே ஏறி வரலானார். அன்பு பின்னால் தள்ள அருள் முன்னால் இழுக்க அஞ்செழுத்து எனும் பஞ்சாட்சரத்தைத் தனக்கு வழி காட்டும் கண்ணாகக் கொண்டு தில்லை வனம் சேர்ந்து ஞான சூரியன் போன்று விளங்கினார்.

தில்லை வனத்தில் வியாக்கிரபாதரைக் கண்டு வணங்கி தான் தவம் செய்தததையும், இறைவன் தனக்காகக் காத்திருக்கும் வியாக்கிரபாதருடன் தில்லை வனத்தில் இருக்குமாறு பணித்ததையும் கூற ''இறைவன் தன் திருவுள்ளத்தால் என்னை நினைக்க நான் என்ன புண்ணியம் செய்தேன்'' என வியாக்கிரபாதர் மகிழ்ந்து உருகினார்.

பதஞ்சலியை சிவகங்கை முதலான இடங்களில் நீராடச் செய்து, சிவதரிசனம் செய்வித்து,



பழம் முதலானவை அளித்து உபசரித்தார் வியாக்ரபாதர். பதஞ்சலி தன் பெயரால் ஒரு சிவலிங்கம் பிரதிட்டை செய்து பூசித்துக் கொண்டு திருமூலட்டான மூர்த்தியையும் தரிசித்துக் கொண்டு இன்பமாக அங்கு வசித்தார்.

தில்லை வனத்திலிருந்த மிருகங்கள் ''நம்முடன் கூடித் திரிய ஒரு புலி மட்டுமன்று. ஒரு பாம்பனும் வந்துள்ளார்'' என, முதலில் சிறிது அஞ்சிய போதிலும், சின்னாட்களில் பழகி வாழலாயின.

வெண்திரை ஒலியார் தில்லை மிருவன விலங்கு யாவும்
பண்டை நம்புலியனன்றிப பாம்பனும் வந்தானென்று
திண்திறல் களநிமிர்த்துச் செவிகளும் சிலிர் தது ஏங்கி
மண்டிய காலம் செல்ல மருங்குற அணைந்த அன்றே

ஸ்ரீசபாநாதபுராணம் என்று ஒரு புராணம் சிதம்பரம் பற்றி உள்ளது. அது மிக அழகாக உள்ளது. அதில் திருமால் மோகினியாக வரவில்லை, அம்மையே மோகினியாக வந்தாள் எனக் காணப்படுகிறது. தேவியாக வரும்போது பவானி என்றும் ஆணுருவம் கொண்டால் திருமால் எனறும், கோபம் கொண்டால் காளி என்றும், போர் மூண்டால் துர்க்கை எனவும் அம்மையை அழைக்கும் வழக்கம் உண்டு. ஆதலால் திருமால் எனக் கூறாமல் அம்மையே மோகினியாக வந்தாள் என்கிறார். ஸ்ரீசபாநாதபுராண ஆசிரியர்.

திருச்சிற்றம்பலம்

# உண்மையால் உயர்ந்த உத்தமன்

கம்பன் கவிநயமணி **வே. தியாகராஜன்**

தன் மகன் இறந்தான் என அறிந்து மூர்ச்சித்துக் கிடந்து சிறிது நேரம் கழித்து எழுந்த அரிச்சந்திரன் ''மகனே! உன் தாய் கூட வராமல் தனியாகக் காடு புகுந்து பாம்பினால் தீண்டப் பெற்ற போது உன்னைப் பெற்ற தந்தை என்று பாவியான என்னைப்பற்றி என்ன நினைத்தாயோ? நாட்டை விட்டு எம்முடன் நீ வந்தது இப்படி அழிவதற்கா? ஒருவனுக்கு அடிமையாகி விட்ட நம் தந்தை இனி மீட்க மாட்டான் என எண்ணி இறந்தாயோ?'' என்றெல்லாம் அழுதவனைத் தன் கணவன் என அறிந்து கொண்டாள் சந்திரமதி.

''பெருமானே! உங்களுடைய துயரம் அதிகமாயிற்று. நமது துன்பங்கள் உலகிற்கு நன்மையாகவே முடியும் என எண்ணுகிறேன். எனவே கடமையை மறக்காதீர்கள் '' என்றாள்.

இது கேட்ட அரிச்சந்திரன் ''பெண்ணே! இந்தக் காட்டிற்கு உரியவனான என் தலைவனுக்குச் சேர வேண்டிய காற் பணமும் முழுத்துண்டும் நான் வாங்காவிட்டால் அது அறத்திற்கு விரோதமாகும். எனவே உன எசமானனான மறையவனிடம் சென்று அவற்றைப் பெற்றுக் கொண்டு வந்து கொடுத்து, உன் மகனை அடக்கம் செய்'' என்றான்.

தன்னை அடிமையாகக் கொண்ட மறையவன் இவற்றைக் கொடுப்பானோ மாட்டானோ என்ற கவலையுடன் சந்திரமதி ஊருக்குள் சென்ற காலத்தில், காசி அரசனது குழந்தை ஒன்றை கள்ளர்கள் கைப்பற்றி, அதன் உடலிலுள்ள நகைகளைக் கழற்றிக் கொண்டு, அந்தக் குழந்தையைக்கொன்று கீழே போட்டுவிட்டு ஓடினார்கள். கீழே கிடந்த அந்தக் குழந்தையின் உடலைக் கண்டு, காட்டிலிருந்த லோகிதாசனது உடலைச் சுடுகாட்டிலிருந்து பூதங்கள் எடுத்து வந்து தெருவில் போட்டுவிட்டனவோ என எண்ணித் தன் கையிலெடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த போது பொழுது விடிந்து விட்டது. காவலர்கள் காசியரசன் குழந்தையை கொன்றுவிட்டாள் என சந்திரமதியை பிடித்துக் கொண்டனர். சந்திரமதிதான் அக் குழந்தையைக் கொல்லவில்லை என்றால் காவலர்கள் நம்பமாட்டார்கள், மேலும், தன மகனான லோகிதாசனைப் பிரிந்து உயிர் வாழ விருப்பமில்லை என நினைத்து ''நான் ஒரு அரக்கி, இந்தக் குழந்தையைக் கொன்றேன்'' என்றாள். காவற்காரரும் மற்ற மக்களும் இதை நம்பி அவளைக் கட்டித் துன்புறுத்தி அரசனிடம் கொண்டு போயினர். அரசனிடம் சந்திரமதி தான் ஒரு அரக்கி என்றும் குழந்தையைத் தானே கொன்றதாகவும் கூறினாள். அரசன் ''இவள் முகத்திலும் கண்ணிலும் கொலை செய்த சாடையே இல்லை. இவள் குழந்தையைத் திருடிக் கொண்டு போய் கொன்றாள் என்றால் அந்த வழிகளில் இவளது கால் சுவடுகள் உள்ளனவா? வேறு சுவடுகள் உள்ளனவா? எனக் கண்டு வாருங்கள்'' என்றான்.

காவலர்கள் சுவடு தேடிச் சென்றார்கள். விசுவாமித்திரர் தன் சூழ்ச்சியாலே சந்திரமதியின் கால் சுவடுகளே எங்கும் நிறையுமாறு செய்து மற்ற சுவடுகள் இல்லாமல் அழித்துவிட்டார்.

காவற்காரர்கள் அங்கு சென்று சுவடுகளைக் கண்டு சந்திரமதிதான் கொலை செய்தவள் எனக் கூறினர். சந்திரமதியும் தான் ஒரு அரக்கி என மீண்டும் கூறினாள். அரசன் தன் மகன் இறந்தது பற்றிக் கூட வருந்தவில்லை. சந்திரமதிக்குத்தான் இரங்கினான். ''இவள் கொலை செய்யக் கூடியவளல்லள், கொலை செய்யவில்லை. ஆனால் வேறு சுவடுகளில்லை. எனவே என்ன செய்வது எனத் தெரியாது சாட்சியங்களைக் கொண்டு சந்திரமதிக்குக் கொலை தண்டனையளித்தான்.

கொல்ல இவள் வல்லவளுமல்லள்; கொலை செய்தாள்
அல்லள் எனில் அங்கொருவர் வந்த அடியில்லை:
தொல்லை வினை இவ்வகை தொடர்ந்தது; அறிதக்கது
இல்லை என மைந்தனில் இவட்குருகி நின்றான்.

காசியரசன் தன் மகனைக் கொன்ற சந்திரமதியை சிரச்சேதம் செய்வதற்காக வீரவாகுவை அழைத்து ''இந்த துட்டப் பெண் என் குழந்தையைக் கொன்றாள். சிலர் கண்டேன் எனக் கூறினர். எனவே இவள் கழுத்தை வெட்டி விடு'' எனக் கட்டளையிட்டான்.

வீரவாகு சந்திரமதியை அழைத்து வந்து, தன் அடிமையான அரிச்சந்திரனிடம் ''நம் அரசனது குழந்தையைக் கொன்ற இவள் தலையை வெட்டு'' எனக் கூறித் தன் வாளையும் அவன் கைகளில் கொடுத்தான். அரிச்சந்திரனும் சந்திரமதியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டனர். ''அரசர்களின் நேர்மை என்றும் வாழ வைக்கும். நம் குலத்தில் நேர்மை குறைந்தவர்களே கிடையாது. எனவே என்னைக் கண்டு இரக்கப்படாமல் தங்களது கட



மையைச் செய்யுங்கள்'' என்றாள் சந்திரமதி. அரிச்சந்திரன் சந்திரமதியைக் கொலைக் களத்தை நோக்கித் தள்ளிவருவதைக் கண்டு ''ஐயோ, இவ்வளவு அழகிய பெண் கொலை செய்வாளா?'' என்றும் ''நல்லவளாகத் தோன்றும் இப்பெண்ணை ஏன் தண்டித்தான்'' என்றும் ''அவளைத் தண்டிக்க அழைத்துச் செல்லும் கொலையாளி திருமால், முருகன், மன்மதன் போன்ற அழகுடையவனாயிருக்கிறானே'' என்றும் பேசினர். வேறு சிலர் ''குழந்தையைக் கொலை செய்த பாவி இவளை யானையின் காலடியில் போட்டு நசுக்க வேணும்'' ''இவளை நாமே கொன்றால் என்ன'' ''இவள் கண்ணில் கூடபடக்கூடாது. நம்மைக் கொன்று விடுவாள்'' 'இவள் அரக்கியானால் கயிற்றால் கட்ட முடியுமா? மாயமாக மறைந்து விடுவாளே'' என்றும் பலர் பலவாறு பேசினர்.

''இவள் யாரோ? இவள் காசிக்கு ஏன் வந்தாள்? என்ன பயனடைந்தாள்? இவள், குழந்தையைக் கொல்லும்படியான எண்ணம் எப்படி ஏற்பட்டது. இவளை அடிப்பது நம்மை அடிப்பது போன்று தோன்றுகின்றதே'' எனச் சிலர் இரங்கிப் பேசினர்.

இந்த நேரத்தில் தேவருலகததில் தேவேந்திரனைப் பார்த்து வசிட்டர் ''விசுவாமித்திரரின் கொடுமையால் அரிச்சந்திரன் படும் துயரம் இன்று நீங்கும்'' எறைார்.

அப்போது விசுவாமித்திரன் அரிச்சந்திரனிடம் வந்து ''அரசனே! நீ ஏன் இவ்வளவு துன்பமடைய வேண்டும்? நீ எனக்கு அரசைக் கொடுக்கவில்லை என்று ஒரு வார்த்தை சொல். இறந்து போனவர்கள் கூட எழுந்து வந்து விடுவார்கள்'' என்றார்.

அரிச்சந்திரனும் சந்திரமதியும் விசுவாமித்திரர் கால்களில் விழுந்து ''எங்கு சென்றாலும் சத்தியம் என்ற வாய்மை துணை செய்யும். நீங்கள் எங்களைப் பொய் சொல்லுமாறு கூறலாமா? உண்மை பேசுவதால் துன்பமே வந்தாலும் பரவாயில்லை. கேவலமான இவ்வுடலைக் காப்பதற்காகப் பொய் கூறுவதா? நரகத்திற்கே சென்றாலும் வாய்மையை விட மாட்டோம். ஊரை இழந்தோம், மகனை இழந்தோம், செல்வத்தை இழந்தோம். ஆனால் வாய்மையை மீற மாட்டோம்.

''பதியிழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த
நிதியிழந்தனம்: இனி நமக்குளதென நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்
மதி இழந்து தன் வாயிழந்து அருந்தவன் மறைந்
தான்.''

வெட்கமடைந்த விசுவாமித்திரர் ஓடி மறைந்தார்.

அரிச்சந்திரன் சந்திரமதியை ''உன் தெய்வத்தை வணங்கி கிழக்கு நோக்கி உட்கார்ந்து கொள்'' என்ற போது '' என் உயிருக்கு ஆபத்து என்பதற்காக தாங்கள் தருமம் தவற வேண்டாம்.

என்று கூறித் தன் கணவனான அரிச்சந்திரனையே வணங்கினாள். குல மகட்குத் தெய்வம் கொழுநன் என்பது பெரியோர் வாக்கன்றோ? ''உலகத்தின் தெய்வம் சிவபெருமான் என்பதும், அவன் வாக்கிலேயே வேதம் வந்தது என்பதும் அத்தகைய வேதத்தில் கூறப்பட்டுள்ள தருமங்களில்வாய்மை என்ற சத்தியம் மேன்மையானது என்றால் அத்தகைய வாய்மையை நான் விரதமாகக் கொண்டது உண்மையானால், அத்தகைய மெய்ம்மை இந்த சந்திரமதிக்கு உண்டு என்றால் இவள் சாகக் கூடாது. இல்லாவிட்டால் இவள் இறந்து அழியக் கடவள்'' எனக் கூறி அவள் கழுத்தை நோக்கி வாளை வீச, அது சந்திரமதியின் கழுத்தில், அரிச்சந்திரனே அவளுக்கு மீண்டும் மணமாலையிட்டானோ என் எண்ணும்படி வாள் மலர்மாலையாக மாறி அவள் கழுத்தில் விழுந்தது.

''நெறியில் அன்னவென்றனை விடாநிறை இவட் குளதேல்
இறுதியின்மையைப் பெறுக; இல்லையெனில் இவள் இறுதி
பெறுக என்று வாள் வீசினன் பேதைதன் கழுத்தில்
மறுமணத் திடுமாலையாய் வீழ்ந்ததுஅவ்வடிவாள்''

சந்திரமதி புடமிட்ட பொன்னாக விளங்கினாள். அரிச்சந்திரன் சாணை பிடித்த வைரம் போல் பிரகாசித்தான். விசுவாமித்திரர் ''நான் துன்புறுத்திப் சோதனைகள் செய்ததால் தான் அரிச்சந்திரனுடைய நற்குணங்கள் உலகம் பூராவும் அறிய நேர்ந்தது. நானே அவனுக்குப் பெரிய உபகாரம் செய்தேன்'' எனக் கூறிக் கூத்தாடினார். வசிட்டர் மன மெலிவு நீங்கி மகிழ்ந்தார். பார்வதி பரமேசுரரும், திருமாலும் திருமகளும், விநாயகரும் முருகனும், பிரமனும், கலைமகளும் ஏனைய எல்லாத் தேவர்களும் தோன்றினர். மும்மூர்த்திகளையும் எல்லாத் தேவர்களையும் போதும் போதும் எனக் கூற அரிச்சந்திரன் வணங்கினான்.

நாரிபாகனை முகுந்தனை நான்முகத் தோனை
மூரிவேலனை விநாயக மூர்த்தியைப் பணிந்தான்.
பூரை பூரை என்றிருக்கையால் அமைத்த புத்தேளிர்
யாரையாரை என்று அறிந்து யாம் விளம்புதும் அம்மா;

''ஐயனே! சிவபெருமானே! தங்களை நான் கண்ணாரக் கண்டு களித்து வணங்க என்ன புண்ணியம் செய்தேன்'' எனக் கூறினான் அரிச்சந்திரன். அம்மை பார்வதி அருள் நிறைந்த கரங்களால் சந்திரமதியை வாரியெடுத்து அவளது கற்பினைப் புகழ சந்திரமதி உடலும் மனமும் பூரித்தாள். முருகப் பெருமான் உயிரிழந்து கிடந்த லோகிதாசனை அழைக்க தூங்கி எழுந்தவன் மாதிரி எழுந்தான். லோகிதாசனுக்குத் தம்பி ஒருவன் தோன்றிய மாதிரி காசியரசனின் மகனும் உயிர் பெற்று எழுந்தான். மும்மூர்த்திகளும் அரிச்சந்திரனைப் போற்றினர். விசுவாமித்திரரைப் பரமசிவன் அழைத்து ''அரிச்சந்திரனை ஏன் சோதனைக்குள்ளாக்கினீர்''? எனக்கேட்க,தேவலோகத்தில் தனக்கும் வசிட்டருக்கும் நிகழ்ந்த சபதத்தைக் கூறி''வசிட்டர் வெற்றி பெற்றார். நான் தோற்றேன். என் தவத்தில் பாதியை அரிச்சந்திரனுக்கு அளித்தேன்'' என்றார். ''அது மட்டுமல்ல, அவனது அரசையும் திரும்பக் கொடுத்தேன்'' என்ற போது ''கொடுத்ததைத் திரும்ப வாங்குவது பாவம், குற்றம், அருவருக்கத் தக்கது' எனக்கூறி அரசை ஏற்க மறுத்தான் அரிச்சந்திரன். மேலும், ''பிறருக்கு அடிமையாகிச் சுடு காட்டைக் காத்த நான் அயோத்தி அரசை எவ்வாறு ஏற்பேன்'' என்றான்.

அந்த நேரத்தில் அக்கினி பகவான் அங்கு தோன்றி ''உன் மனைவியை மகனை அடிமையாகக் கொண்டமறையவன் நானே'' என்றான். யமதருமன் அங்கு தோன்றி, ''நானே சுடுகாட்டுப் பணியாளாய் வந்தேன். நீ காவல் காத்தது சுடுகாடன்று யாகசாலை'' எனக் கூறினான். சுடுகாடு மாறி''பூராவும் யாகமாகவும், மரங்களெல்லாம் வேள்வித் தூண்களாகவும் (யூபத்தம்பம்), ஆகாயமெல்லாம் யாக நெருப்பில் வந்த புகைகளாகவும், நெருப்பெல்லாம் வேள்வித் தீயாகவும், பிசாசுகளாகக் காணப்பட்ட யாவும் முனி கணங்களாகவும், பேசும் ஒலியெலாம் வேதம்பாடும் முழக்கமாகவும், பிணங்களாகத் தோன்றியவை யாகப் பசுக்களாகவும் காட்சியளித்ததைக் கண்டு மகிழ்ந்தான் அரிச்சந்திரன்.

வாயெலாம் யாகம்; மரமெலாம் யூபம்
வானெலாம் ஆகுதித் தூபம்
தீயெலாம் முத்தி, திசையெலாம் தருப்பை
தீப்படு விறகெலாம் சமிதை
பேயெலாம் முனிவோர்; பேச்செலாம் வேதம்.
பிணமெலாம் அதற்சுமை பசுக்கள்
ஆயவாறெலாம் நோக்கினான் தொல்லை
அமைந்ததே ஈதென அமைந்தான்.

அரிச்சந்திரன் அயோத்தி வந்து சேர்ந்தான். மக்கள் மகிழ்ச்சியுடன் எதிர் கொண்டனர். முடிசூடினான். விசுவாமித்திரர் அங்கு தோன்றி அரிச்சந்திரனுக்குத் தன் தவத்தில் பாதியை வழங்கினார்.

அரிச்சந்திரன் சிம்மாதனமேறி அயோத்தியை நீதி தவறாது அரசு புரிந்தான். சத்தியம் வென்றது.

## நாம் அறிய வேண்டிய செய்தி

பாரத நாட்டிற்கு, அயல் நாட்டினரிடமிருந்து விடுதலை பெற்றுத் தந்த மகாத்மா காந்தி, தனது குழந்தைப் பருவத்தில், அரிச்சந்திரன் கதையை நாடகமாகக் கண்டு உண்மையையே தனக்கு ஒரு கொள்கையாகக் கொண்டார். அவரது சுய சரித்திரத்திற்கே சத்திய சோதனை எனப் பெயர் இட்டார். எனவே, இக்கதையை உணர்ந்து படிப்பவர் உண்மை நெறி தவறமாட்டார் என்பது உறுதி.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் பிரித்துத் துன்புறுத்தியதற்குப் பரிகாரமாக அதே சூரிய குலத்தில் பிறந்த இராம பிரானுக்குச் சீதாபிராட்டியைத் திருமணம் செய்து வைத்தார். ஒரு கணவன் மனைவியைப் பிரித்த பாவம் நீங்க அதே குலத்தில் ஒரு கணவன் மனைவியராக சீதா இராமர்களைச் சேர்த்து வைத்து இனி இங்கு வருவதே இல்லை எனத் தீர்மானித்து மேருமலைக்குச் சென்று தவம் செய்யலானார். அதனாலேயே பால காண்டத்திற்குப் பின் இராமாயணத்தில் விசுவாமித்திரர் வரவில்லை எனப் பெரியோர் கூறுவர்.

நம் அரசாங்கமும் ''வாய்மையே வெல்லும்'' என்ற கொள்கையுடையதாக உள்ளது. அத்தகைய நல் வழி நடந்து உலகிற்கே நம் நாடு வழிகாட்ட இறைவனை வேண்டுவோமாக!

*''வாய்மையே வெல்லும்''*

நாயன்மார் பாடிய திருத்தலம்



# திருவேதிக்குடி

**சீ. தியாகராஜன்**

தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்குச் செல்லும் பெரு வழியில் உள்ள திருக்கண்டியூரிலிருந்து கிழக்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் இத்தலம் உள்ளது.

வேதி—பிரமன், பிரமன் பூசித்த காரணத்தால் வேதிக்குடி எனப் பெயர் பெற்றது.

வேதங்கள் வழிபட்ட காரணத்தால் இத்தலம் வேதிக்குடி என்றும் பெயர் எய்திற்று. இறைவன் வேதபுரீசுவரர் என வழங்கப் பெற்றார். இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய இரண்டு பதிகங்களைப் பெற்றுள்ளது. ஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரத் திருப்பதிகத்துள் கன்னிப் பெண்கள் திருமணம் கொள்வதை இத்தலப் பெருமைகளுள் ஒன்றாக ஓதியிருத்தலின் இத்தலத்திறைவரை வழிபடும் கன்னிப் பெண்கள் விரைவில் கடிமணம்பெறுவர் என்பதை அறியலாம். ஐயாறப்பர் சித்திரை மாதத்தில் எழுந்தருளும் ஏழூர்ப்பதிகளுள் இது நானகாவதாகும். ஆண்டு தோறும் பங்குனித் திங்கள் 13 ஆம் நாள் தொடங்கி மூன்று நாட்கள் இங்கு சூரிய பூசை நிகழ்கிறது.

இறைவன் அருள்மிகு வேதபுரீசுவரர் எனவும், இறைவி அருள்மிகு மங்கையர்க்கரசி எனவும் வழங்கப் பெறுகின்றனர். சுவாமி சந்நிதியில் இறைவன் நான்கு திருமுகங்களாலும் அருளிச் செய்யும் வேதங்களைச் செவி சாய்த்துக் கேட்கும் நிலையில் உள்ள விநாயகர் வேத விநாயகர் எனப் பெறுவார்.

தீர்த்தம்: வேததீர்த்தம். கோயிலுக்கு எதிரில் உள்ளது.

தலமரம்: வில்வம். வடக்குப் பிரகாரத்தில் உள்ளது.

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் எதிரே வீதியை அடுத்து வேததீர்த்தம் திகழ்கிறது. ஒரு காலத்தில் இரண்டு பிரகாரங்களை உடையதாய்த் திகழ்ந்துள்ள அமைப்பில் கோயில் உள்ளது. இப்போது ஒரு பிரகாரமே உள்ளது. அம்பாள் கோயில் இரண்டாம் வெளிப் பிரகாரத்தில் இருக்கிறது.

நந்தி பலி பீடங்களை அடுத்து அம்பாள் கோயில் தெற்கு நோக்கிய சந்நிதியோடு திகழ்கிறது. அம்பாள்கோயில் அடுத்து வசந்த மண்டபம் கூள்ளது. இவற்றைத்தரிசித்துக்கொண்டுகோயிலுக்குள் செல்லலாம்.

மூன்று நிலைகளோடு கூடிய சிறிய இராஜ கோபுர வாயிலைக்கடந்து கோயிலுக்குள்சென்றால் மகா மண்டபம் உள்ளது. நடராஜர் சபை இங்குள்ளது. கோயிலை வலம் வரும்போது திருமாளிகையில் நூற்றெட்டுச் சிவ லிங்கங்கள் வரிசையாகப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள காட்சிகளைக் காணலாம். கர்ப்பக் கிரகக் கோஷ்டங்களில் தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே அர்த்த நாரீசுவரர், வடக்கே பிரமன் உள்ளனர். மேற்குப் பிரகாரத்தில் துர்க்கையும் விநாயகரையும் முருகனையும், மகாலட்சுமியையும் வழிபட்டுக் கொண்டு சுவாமி சந்நிதியை அடையலாம்.

உள்ளே அர்த்த மண்டபத்தை அடைந்து சந்நிதியில் நிற்கிறோம். சந்நிதியில் இடது காலை உயர வைத்துக் கொண்டுள்ள செவி சாய்த்த விநாயகரைத் தரிசிக்கலாம். இறைவன் இத் தலத்தில் வேதங்களை அருளிச் செய்கின்ற காரணத்தினால் விநாயகர் இதனைக் கேட்டுக் கொண்டிருப்பதாக ஐதீகம் கூறப்படுகிறது. இறைவன் பெரிய திருவுருவம்.


நடராசர் சந்நிதிக்கு அருகில் அம்பாளின் பழைய அழகிய திருவுருவம் உள்ளது. சப்தஸ்தான லிங்கங்கள் உள்ளன.

இக்கோயில் முதலாதித்த சோழன் கட்டியுள்ள கற்றளி. இக்கோயிலில் சேர இராஜகேசரி என்பவர் கோப்பரகேசரிவன்மர் காலங்களில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுகள் உள்ளன. இக்கல் வெட்டுகளில் இறைவர் திருவேதிக்குடிமகாதேவர், பரகேசரிசதுர்வேதிமங்கலத்து மகாதேவர் என்னும் பெயர்களால் குறிக்கப்படுகிறார். இக்கல்வெட்டுக்கள் நந்தா விளக்குகளுக்கு நிவந்தங்கள் அளித்ததைக் குறிப்பிடுவதோடு, இக்கோயிலுக்குத் திருப்பள்ளித்தாமம் பறித்துத் தொடுப்பார் இருவர், திருமெழுக்கிடுவார் நால்வர், காளமூதுவார் நால்வர், நந்தவனக்குடிகள் மூவர் இருந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.

திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, வேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்னும் ஏழு தேவாரப் பாடல் பெற்ற தலங்களைத் தான் 'சப்தஸ்தானங்கள்' என்று கூறுவர். இத்தலங்கள் தஞ்சாவூருக்கு ஏழுகல் தொலைவில் திருவையாற்றைச் சார்ந்துள்ளது.

இத்திருக்கோயில்கள் காவிரி, குடமுருட்டி, என்னும் ஆற்றின் கரைகளில் அமைந்துள்ளது. பொய்யா வளஞ்சுரக்கும் இவ்வாற்றின் ஊட்டத்தால் நெல்விளை கழனிகளும், தென்னை, கமுகு, கரும்பு, வாழைத் தோட்டங்களும், இவற்றின் ஊடே சுழித்தோடும் நீர் நிறைந்த வாய்க்கால்களும் எங்கும் பசுமைக் காட்சி வழங்கும்.

இயற்கையன்னை, தன் முழுப் பொலிவோடு விளங்கும் சோழ நாட்டின் எழில் முகமென விளங்குவன இவ்வேழூர்த் தலங்கள் உள்ள இடங்களே யாகும். இவ்வேழூரின் இடையிலும், பக்கத்தும் தேவாரப் பாடல் பெற்ற கோயில்கள் சில உள்ளன வாயினும் அவற்றை இவ்வேழூர்த் தலங்களோடு சேர்த்துக் கணக்கிடாமை வழி வழி வந்த மரபாகும்.



திருவையாற்றிலுள்ள ஐயாறப்பர் (சிவபிரான்) கோயிலில், சித்திரைத் திங்களில் பெருவிழா நடைபெறும். அத்திங்களின் நிறைமதியன்று(பௌர்ணமி) ஐயாறப்பர் திறந்த பல்லக்கில் புறப்பட, ஆயிரக் கணக்கான அடியார்கள் அவர் பின் செல்வர். தேவாரம் பாடும் கூட்டங்களும் பஜனைக் கூட்டங்களும் இசைக் கருவிகளுடன் பாடிக் கொண்டு செல்லும், அப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து அக்கூட்டங்களுடன் பலர் செல்வர். சிலர் ஆடியும், பாடியும், பல வேடங்கள் புனைந்தும் வருவர். ஆயிரக் கணக்கான பொது மக்கள் இவைகளைப பார்த்துக் கொண்டு உடன் செல்ல, பல்லக்கிற்கு முன்னால் பல வகை வாத்தியங்களும் எடுபிடிகளும், முழங்கிக் கொண்டும் எடுத்துக் கொண்டும் செல்லப்படும்.

கூட்டத்தில் செல்வார்க்குச் சிலர் பெரிய பெரிய விசிறிகளைக் கொண்டு வீசுவர், சிலர் சந்தனக் குழம்புகளைத் துருத்தியில் கொண்டு பீச்சுவர். வழி எல்லாம் தண்ணிய பூப்பந்தர்களும், தோரணங்களும் அழகிய காட்சியாகி விளங்கும். பக்தர்களின் வீட்டு வாயிற் பந்தர்களிலும், தாறுகளுடன் உள்ள வாழை மரங்களும் குலைகளும், இளநீர்க் குலைகளும், ஈச்சங்குடைகளும் கட்டப்பெற்றுத் தொங்கும். மா, தென்னை, பனை மற்றும் காகிதங்களால் செய்யப் பெற்ற தோரணங்கள் தொங்கும். தெருக்களெல்லாம் நீர் தெளித்துத் தூய்மை செய்து கோலங்களால் பொலிவு பெறும். இத்துணை எழிலோடும், ஆரவாரத்தோடும் ஐயாறப்பர் பல்லக்கு திருவையாற்றுக்கு வடக்கே இரண்டு கல் தொலைவிலுள்ள திருப்பழனத்தை அடையும்.

திருப்பழனத்திற்கு அரைக்கல் தெற்கே திங்களூருக்கு பிரிந்து செல்லுமிடத்தில் அன்று திருநாவுக்கரசு நாயனார் பேரால் அப்பூதி அடிகள் அமைதத தண்ணீர்ப்பந்தல் இன்றும் அன்பர்களால் அங்கு அறம் புரிகின்றது. ஐயாறப்பர் சிவிகை அவ்விடத்தில் சிறிது நேரம் நின்று வழிபாடு கொள்ளும், ஊர்வலத்தில் வரும் அன்பர்கள் அப்பூதி அடிகளின் அன்பினைக் குரு பக்தியினை வியந்து, மகிழ்ந்து போற்றி அங்கே நீர் அருந்துவர். அப்பந்தலில் நீரேயன்றி, காப்பி, சுக்குநீர், மோர் முதலிய பருகு பண்டங்களும் யாவர்க்கும் வழங்கப்படும். பின்னரே பல்லக்கு திருப்பழனம் அடையும்.

இந்நிலையில் திருப்பழனத்தார் தம்மூரிலும் இறைவர்க்கு விழாக் கொண்டாடி. அவரைச் சிவிகையில் அமர்த்தி விழாக்கோலத்துடன் ஊர் எல்லையில் கொணர்வர். திருவையாற்றுப் பல்லக்குடன் அதுவும் சேர்ந்து கொள்ளும். அங்கிருந்து இரு பல்லக்குகளும் ஊர்வலமாகக் கோயிலுக்குள் சென்று தங்கி வழிபாடு கொண்டு திருப்பழனத்தினின்றும் புறப்பட்டுக் காவிரி, குடமுருட்டியாறுகளைக் கடந்து, திருசோற்றுத்துறை என்னும் தலத்தை அடையும்.

அப்போது அத்தலத்தாரும் தம்மூர்ப் பெருமானுக்கு விழாவியற்றிப் பல்லக்குடன் தம்மூர் எல்லையில் வந்த இரு பல்லக்குகளுடன் சேர்வர்.

பழனத்தில் நடந்தவாறே இங்கும் நகர்வலமும், கோயிலில் தங்கி வழிபாடும் நடக்கும். பிறகு மூன்று பல்லக்குகளும் திருவேதிக்குடி அடையும். அங்கும் இப்படியே நடைபெறும். நள்ளிரவில் நான்கு பல்லக்குகளும் கண்டியூரை அடையும். அங்கும் இப்படியே வாணவேடிக்கை மிகு சிறப்பாக நடைபெறும். பின் ஐந்து பல்லக்குகளுடன் திருப்பூந்துருத்தியைப் பின்னிரவில் அடையும், அங்கும் முன் ஊர்களில் நிகழ்ந்தவாறே நிகழும்.

விழாவின் தலையாய சிறப்புகள் கண்டியூரிலும் திருப்பூந்துருத்தியிலும் தான் உயர்ந்த எல்லையை அடையும். பொழுது புலரும் நேரத்தில் ஆறு பல்லக்குகளும் திருநெய்த்தானத்தையடையும். இங்கும் முந்திய ஊர்களைப் போலவே விழா நடக்கும். கடைசியாக ஏழு பல்லக்குகளும் திருநெய்த்தானத்திலிருந்து திருவையாற்றை அடையும். அங்கு நான்கு வீதிகளும் விண்ணக நகரோ எனுமளவு அணி செய்யப் பெற்றிருக்கும். மக்கள் யாண்டும் மொய்த்திருப்பர். ஏழுபல்லக்குகளும் நகர்வலமாக ஐயாறப்பர் கோயிலை உச்சிப்போதில் அடையும். அப்போது விழாவின் முழு நிறைவான மகழ்ச்சியும் பக்திமையும் கனிந்து கிளர்ச்சியாகும். அந்த அன்புக் கிளர்ச்சியால் கோயிலின் பெரிய மண்டபத்தில் அப்பல்லக்குகளைத்தாங்கி வருவோர் சிவிகைளைத் தாங்கியவாறே தம்முழு ஆற்றலுடன் ஆடுவர். மக்கள் அரகர என்று மனமுருக மெய்ம்மயிர் சிலிர்க்க ஆரவாரம் செய்வர். அவ்வொலி விண்ணளவும் சென்று விம்மும், அன்புணர்ச்சி அவர் உள்ளத்தும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடும். அன்பர்கள் பலர் கண்களில் அவ்வெள்ளம் வழியும்.

இந்நிலையில் பல்லக்குகளில் எல்லா வடிவங்கட்கும் ஒரே நேரத்தில் தீபாராதனை நடக்கும். அது கண்டு அன்பர்கள் அரகரவென்று விண்ணதிர முழங்குவர். அப்போது அன்பர்கள் பெறும் மெய் மறக்கும் அன்புணர்ச்சியின் பேரின்ப நிலையை எவ்வாறு விளக்க முடியும்? பின்னர் பலலக்குகள் தத்தம் ஊர் செல்லும். இவ்வாறு நடைபெறும் விழாவையே திருவையாறு சத்தானம் (சப்தஸ்தானம் ) என்று பொது மக்கள் ஆர்வம் பெருகக் கூறுவர். சோழ நாட்டினர் அனைவருக்கும் இவ் விழா உயிர் போலச் சிறந்து விளங்குகின்றது.

இவ்வாறு ஏழூர்ப் பல்லக்குகளும் ஏழுர்களிலும் அவற்றின் இடையில் உள்ள ஊர்களிலும் வலமாக வரும் போது ஊர்களெல்லாம் தெருக்கள் எல்லாம்வழிகளெல்லாம்பூப்பந்தர்களாலும்பல்வகைத் தோரணங்களாலும் அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். அத்துடன் அறத்துறையில் ஆர்வமிக்க அன்பர்கள் தனித்தும் ஒன்று சேர்ந்தும் ஊர் வலத்தில் செல்லும் ஆயிரக்கணக்கான அன்பர் கட்குத்தத்தம் இலலங்களிலும்பொதுவிடங்களிலும் வழிகளிலும் பல்வகையான சிற்றுண்டிகளையும் பருகும் தேனீர்களைப் (பானங்கள்) பரிந்து அன்புடன் வழங்குவர்.

திருச்சோற்றுத் துறையில்தான் பெரும் பாலும் யாவர்க்கும் பகல் உணவு ஊட்டப்படும். வெளியூர்களிலிருந்து இவ்வூரில் வந்துஇருந்து அடியவர்களுக்குச் சமைத்து உணவளிப்பர். திருவேதிக்குடியிலும் உணவு வழங்கல் உண்டு. ஆயிரக்கணக்கான அன்பர்கள் உண்டும், உணவுக்கு வாருங்கள் வாருங்கள், என்று ஊரில் உள்ளவரை அழைத்தபடியும் இருப்பர். உண்பதற்குத்தான் ஆட்கள் வேண்டும்.

பல்லக்குகள் செல்லும் வழியிலுள்ள ஊர்களிலும், அடுத்துள்ள ஊர்களிலும் இவ்வாறே வீதி அணிகளும், உணவளிப்புகளும் காணப்படும.

இவ்வாறு திருவையாறு சப்தஸ்தான விழா நடைபெறும் சிறப்பினால் மக்களிடத்தே உள்ள அரிய நல்லுணர்ச்சிகள் யாவும் வெளிப்படுகின்றன. அவற்றால் தெய்வ உணர்ச்சி, சமய உணர்ச்சி, மக்கள் ஒற்றுமை, சாதி வேற்றுமை நீங்கல், ஒப்புரவாற்றும் அன்பு, அளவிலா மகிழ்ச்சி முதலியன உண்டாகின்றன. தஞ்சையரசர்கள் இவ்விழாவின் பயன் உணர்ந்து இதனைப் பெருஞ்சிறப்போடு நடத்தி வந்தனர்.

---



# ஐயன் அருள் வேண்டினோம்

கூடி வரும் மேகம் போலே ஐயப்பா—உன்னை
நாடி நின்றோம் வாழ்வினிலே ஐயப்பா
பாடிபாடிச் சரணடைந்தோம்ஐயப்பா-உன்னை
பாடுவதால் ஒன்றுபட்டோம் ஐயப்பா (கூடி)
தேவை வேண்டி வரும்போது ஐயப்பா—எங்கள்
தேவைக்கொரு வழி செய்வாய் ஐயப்பா
ஆவதெல்லாம் நின் செயலே ஐயப்பா—எங்கள்
ஆனந்த உயிர் வடிவே ஐயப்பா (கூடி)

அமைதியின்றி தவிக்கும்போது ஐயப்பா—மன
அமைதி தந்து அருள் புரிவாய் ஐயப்பா
உமையவளாம் சக்தி நிறை ஐயப்பா—தினம்
உள்ளத்திலே இருந்தாள்வாய் ஐயப்பா(கூடி)

மாலையணிந்து விரதமிருந்து ஐயப்பா—மனக்
கட்டுப்பாடு வளர்த்திடுவோம் ஐயப்பா
காலையொளி உதயம்போலே ஐயப்பா—வாழ்வு
உதயமாக வழி நடத்து ஐயப்பா (கூடி)

உன் நினைவால் மனிதருக்குள் ஐயப்பா—மன
வேற்றுமைகள் தானுண்டோ ஐயப்பா
பொன்பொருளால் ஏற்றதாழ்வு ஐயப்பா-இங்கு
இல்லாத சமத்துவமே ஐயப்பா (கூடி)

பொய்பேசி நெய்சோறு ஐயப்பா—உண்ண
முடியாத நிலை வளர்ப்பாய் ஐயப்பா
மெய் பேசி நொய் கஞ்சி ஐயப்பா—உண்ண
அமுதாகும் உயர்வளிப்பாய் ஐயப்பா

பாரதத்தாய் மகிழ்ந்திடவே ஐயப்பா—பாரில்
பரவிடுமே நின் புகழும் ஐயப்பா
ஊர் உலகம் போற்றிடவே ஐயப்பா—நாங்கள்
சேர்ந்துழைப்போம் வாழ்வுயர ஐயப்பா

—கவிஞர் மா. கண்ணன்

ஆழ்வார் பாடிய திருத்தலம்

# நவதிருப்பதிகள்

**ஆ. வெ. ராமானுஜம்**

## 1. ஸ்ரீவைகுண்டம்

மூலவரும் தாயாரும்: ஸ்ரீவைகுண்டநாதன், வைகுந்தவல்லி பூ தேவி இரண்டும் தனிக் கோவில் நாச்சியார்கள்.

மூலவர் ஆதிசேசன் குடைபிடிக்க, கிழக்கு முகமாக நின்ற கோலம், திருமார்பில் லக்குமி,

உற்சவர் : கள்ளர்பிரான், ஸ்ரீதேவி, ஸ்ரீதேவி.

வரலாறு :

முன்பு வனமாக இருந்த இடத்தில் மேய்ச் சலுக்கு வந்த பசு ஒன்று தினந்தோறும் ஒரு குறிப் பிட்ட இடத்தில் பாலைப்பொழிய இச் செய்தி அறிந்த மன்னர் அவ்விடத்தை தோண்டிப் பார்தத பொழுது பூமிக்குள் மூலவர் இருந்ததாகவும், எனவே இம்மூலவருக்கு பால் பாண்டியன் என்ற பெயரிட்டு அவ்விடத்தில் கோயில் கட்டினார். இதன்படி தினசரி பால் அபிசேகமும் வெள்ளிக் கிழமை கூடுதல் பால் அபிசேகமும் செய்யப்படு கிறது.

கால தூஷகன் என்ற கள்ளர் தலைவனைக் காப்பாற்ற அவன் வேடம் பூண்டு, அரசனைக் கண்டு, பின் அவனை காப்பாற்றியதால்இவருக்குக் கள்ளர்பிரான் என்ற பெயர் வரலாயிற்று. அந்த கள்ளர் தலைவன் கோவில் திருப்பணிக்காக கொள்ளை அடித்ததாகவும், மணப் படை வீட்டு மன்னரிடம் பிடிப்பட்டதாகவும், அப்போது எம் பெருமாள் காப்பாற்றியதாகவும் வரலாறு.

கோமகன் என்னும் அசுரன் பிரம்மாவின் வேதத்தை அபகரித்துவிட்டதாகவும் அதை மீட்க மகாவிஷ்ணுவைப் பிரார்த்தித்து, பிரம்மா இவ் விடத்தில் தவம் செய்ததாகவும் பகவான் தோன்றி வேதத்தை திருப்பி வாங்கிக் கொடுத்ததாகவும் வரலாறு.

பிருகு சக்கரவர்த்தி, இந்திரன் ஆகியோருக்கு எம் பெருமான் காட்சி கொடுத்த இடம் இத்தலம்.

சுவாமி நம்மாழ்வாரால் பாடப்பெற்ற திவ் விய தேசம்.

மணவாள மாமுனிகள் புதுக்குடியில் வாழ்ந்த காலத்தில் மங்களாசாசனம் செய்யப் பெருமை பெற்றது.

கோவில் அமைப்பு :

சித்திரை, ஐப்பசி, மாதங்களில் (அநேக மாக 6 ஆம் தேதியை ஒட்டி) சூரிய ஒளி மூலவர் மேல் படும்படியான அமைப்பு. இதற்காக கொடி மரம் தெற்கே சற்று விலகியும், கருடபக வான் சந்நிதி சிறியதாகவும் அமைக்கப்பட்டிருக் கிறது.

கோவிலில் கல்வெட்டுகள் உள்ளன. தொல் பொருள் இலாக்காவினர் ஆராய்ச்சி செய்தால் பல வரலாறுகள் தெரிய வாய்ப்புகள் உள்ளன.

சித்திரை மாதம் பிரம்மோற்சவம், வைகாசி மாதம் ஆழ்வார் திருநகரி ஐந்தாம் உற்சவத்திற்கு பல்லக்கில் எழுந்தருளி ஆழ்வாருக்குக் காட்சி கொடுத்து கருட சேவை முடித்து திரும்புவார். வசந்த உற்சவம், திருப்பவித்திர திருநாள், ஐப்பசி அசுவதி ஒரு நாள் திருநாள் நடைபெறும். மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி அத்யயன உற்சவம் சிறப்பான ஒன்று. அதில் பகல் பத்தில் (முன்பத்து நாள்) பூச்சாத்துதல் என்பது விசேஷமாக நடை பெறும். தினமும் இரண்டு திருக்கோலம்.

வைகுண்ட ஏகாதசி தொடங்கி நடைபெறும் திருவாய்மொழித் திருநாளில் இரவு நடையழகுடன் சுவாமி உள்ளே எழுந்தருளி கற்பூரசேவை நடை பெறுவது தனிச் சிறப்பு கொண்டது.

தை அனுஷத்தன்று மூலவர் திருநட்சத்திரம். சிறியவரான மூலவர் அன்று உற்சவர் போல் மிக அழகாகக் காட்சி அருளுவர்.

தாமிரவருணி நதிக்கரையில் அமைந்துள்ளது கலசதீர்த்தம்.

110 அடி உயரமுள்ள அழகிய பெரிய கோபு ரத்தையும் சிற்ப வேலைப்பாடுகள் பலவற்றையும் கொண்டு காண்பவர் உள்ளங்களைக் கவரும் வண் ணம், இக்கோவில் அமைந்துள்ளது.

திருநெல்வேலி — திருச்செந்தூர் மார்க்கத் தில் அமைந்து உள்ளது. ரெயில் (புகை வண்டி) மூலமும், பஸ்(பேருந்து) மூலமும் வர வசதியுள்ளது.

செயல் அலுவலர் நிர்வாகத்தில் அறநிலை யத்துறை ஆளுகையின் கீழே உள்ளது.

இது பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும்.

## 2. திருவரகுண மங்கை

மூலவரும் தாயாரும் :

விஜயாசனப் பெருமாள், வரகுண மங்கைத் தாயார் — வரகுண வள்ளித் தாயார். தனிக் கோவில் நாச்சியார் இல்லை. உபய நாச்சியார்தான் மூலவர் ஆதிசேடன் குடைபிடிக்க வீற்றிருந்த திருக் கோலம், கிழக்கு முகம்.

உற்சவர்.

எம்மிடர் கடிவார் (சுவாமி நம்மாழ்வார் இட்ட திருநாமம்)

வரலாறு :

வேத வித்தகன் என்னும் அந்தணர், விஷ் ணுவை நோக்கி இத்திருத்தலத்தில் தவமிருந்ததாக வும், பகவான் அவருக்கு காட்சி கொடுத்ததாகவும் அப்போது அந்த அந்தணர் பிரார்த்தித்தபடி ''விஜயாசனர்'' என்ற திருநாமம் ஏற்பட்டதாக வும் வரலாறு.

ரோமச முனிவர், சத்தியவான், அக்னி ஆகியோருக்கு பகவான் காட்சி கொடுத்த இடம்.

இடது காலினை மடக்கி, வலது காலை தொங்க விட்டுக் கொண்டு ''விஜயாசனமிட்டு'' அமர்ந்து சேவை சாதிப்பதால் விஜயாசனர் எனப் பெயர் பெற்றார்.

ஸ்ரீவைகுண்டம் — தூத்துக்குடி ரோட்டில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் கிழக்கே உள்ளது. பஸ் வசதி உள்ளது. நடந்தும் செல்லலாம்.

சுற்றி நத்தம் புறம்போக்காக இருந்ததால் நத்தம் எனவும் பெயர் வழங்கப்படுகிறது.

ஸ்ரீவைகுண்டத்தில் அர்ச்சகர் இருப்பதால் அவரை அழைத்துச் சென்று தரிசனம் செய்ய வேண்டும்.

(இது ஸ்ரீவைகுண்டம் திருக்கோவிலின் உப கோயிலாகும்)

நம்மாழ்வார் பாடல் பெற்ற திவ்வியதேசம்.

## 3. திருப்புளியங்குடி

மூலவரும் தாயாரும்:

பூமிபாலன், மலர்மகள் நாச்சியார். நில மகள் நாச்சியார். தனிக்கோயில் நாச்சியார் கிடையாது.

சயனத் திருக்கோலம், புஜங்க சயனம், கிழக்கே திருமுக மண்டலம், நாபி கமலத்தில் பிரம்மாவை சிருஷ்டித்து உள்ளபடி சேவை அருளுகிறார். இரண்டு தாயார்களும் சுவாமியின் திருவடியருகிலே அமர்ந்து பணிவிடை புரிகின்றனர். அந்த கைங்கர்ய பிராப்தியை தனக்கு அருளவேண்டி நம்மாழ்வார்.

''வடிவிணையில்லா மலர் மகள் மற்றை நிலமகள்
பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனும்
பிடிக்க நீயொருநாள் கூவுதல் வருதல் செய்யாயே''
என எம்பெருமானைப் பிரார்த்திக்கிறார்.

மரகதப் பச்சையை ஒத்த கல்லால் செய்த மிகுந்த வேலைப்பாடு அமைந்த அழகிய திருமேனி, இவ்வளவு பெரிய எம்பெருமாளுக்கு யார் நகை செய்து சார்த்தி அழகு காணப் போகிறார் எனக் கருதியோ என்னமோ அவர் திருமேனியிலேயே நகைகள், மாலைகள், கணையாழி, தோள்வளை, பூணூல், வஸ்திரம் உள்பட மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த எம்பெருமாளை ஒரு முறை சேவித்தவர் தம் வாழ்நாள் உள்ளளவும் மறக்கமாட்டார்கள்.

பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளி கொள்ளும் பரந்தாமன் அடியவர்களாகிய நமக்காக அதே போல இங்கு சயனமாகக் காட்சி அருளுகிறார்.

சுவாமி நம்மாழ்வார் பாடிய திவ்வியதேசம் இது. ஸ்ரீமந்நாராயணனே நம்மாழ்வாரை சுவீகரிப்பதற்காக இங்கே சயனமாகவும், வரகுண மங்கையில் வீற்றிருந்தும், ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் ஆழ்வாரை ஆட்கொண்டதாக ஆன்றோர் அருள்ச் செய்வர்.

''புளியங்குடிக் கிடந்து வரகுணமங்கை இருந்து
வைகுந்தத்துள் நின்று''

என ஆழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

**கம்பரின் இராமாவதாரம்**
**அடுத்த இதழில்...**

வரலாறு :

வசிஷ்ட புத்திரர்களால், அசுரனாக ஆவாய் என சபிக்கப்பட்ட யக்ஞ சர்மா என்ற மறையவன் பகவானை வணங்கி சாப விமோசனம் ஆனதாக ஸ்தல வரலாறு கூறுகிறது.

இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோசம் விடுபட்ட ஸ்தலம்.

வருணன், தர்மராஜன், ஆகியோருக்கு பகவான் காட்சி கொடுத்த இடம்.

அருகில் உள்ள திருக்குளம் வருண தீர்த்தம்.

கோயில் அமைப்பு:

ஆதிசேடன் குடைபிடிக்க சயனம்கொண்ட பகவான். எல்லாம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. பெருமாள் திருவயிற்றிலிருந்து தாமரைக்கொடி (தொப்புள்) கிளம்பிச் சென்று பிரம்மாவின் தாமரை மலருடன் சேர்ந்து கொள்கிறது.

விசேடங்கள்:

புரட்டாசி, கடைசி சனிக்கிழமையன்று ஒரு கோட்டை நல்லெண்ணெய் காப்பு, வருடந்தோறும் நடத்தப்படுகிறது. மழை வேண்டியும் விசேடமாக எண்ணைக் காப்பு செய்விக்கப்படுகிறது.

(ஸ்ரீவைகுண்டம் திருக்கோயிலின் உபகோயில்)

## 4. பெருங்குளம்—திருக்குளந்தை

மூலவரும், தாயாரும்:

ஸ்ரீநிவாசன் (வேங்கடவாணன்), நின்ற திருக்கோலம்; திருமார்பு லெட்சுமி; அலமேலு மங்கைத் தாயார். குழந்தைவல்லி, (உபய நாச்சியார்கள்.)

உற்சவர்:

மாயக்கூத்தன், ஸ்ரீதேவி, பூமிதேவி, கருட பகவானுடன் சேர்ந்த உற்சவர்.

வரலாறு:

கமலாவதி என்ற பிராமண குலத்து கன்னிகை கடவுளையே கணவனாக அடைய தவம் செய்தாள். அப்போது எம்பெருமாள் மகாவிஷ்ணு தோன்றி, அவளைத் திருமணம் செய்து கொண்டதாகவும், கன்னி தவம் செய்த இடமாகையால்''பாலிகைவனம்'' என்ற பெயரும் இத்தலத்திற்கு உண்டு என்பதும் வரலாறு.

அசுமாசூரன் என்ற அசுரன் அர்ச்சகர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்ததாகவும், அர்ச்சகர்கள் எம்பெருமானிடம் முறையிட, பகவான் அவனைப் போலவே நாட்டியமாடி மாயாயுத்தம் செய்து, அவன்காலைப்பிடித்துத் தரையில்மோதி, அவனைக் கொன்று அர்ச்சகர்களைக்காப்பாற்றியதால், மாயக் கூத்தன் என்கிற திருநாமம் பெற்றதாக ஐதீகம்.

ஸ்ரீவைகுண்டம் அருள்மிகு கள்ளப்பிரான் சுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் நிர்வாகத்தில் இவ்வாலயம் உள்ளது.

(இது பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும்).

**(அடுத்த இதழில் நிறைவு பெறும்)**

# வைகுண்ட ஏகாதசி

டாக்டர் த. அமிர்தலிங்கம்

ஏகாதசி என்பது ஓர் உத்தம புண்ணிய காலம். ஏகாதசி விரதம்போல் சிறந்த விரதமில்லை என்பது முதுமொழி.

கிருதயுகத்தில் முரன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். தேவரையும், முனிவர்களையும் கொடுமைப்படுத்தினான். இந்திரன் வேண்டுதலுக்கிணங்க திருமால் முரனுடன் போரிட்டார். முரனும் முராரியும் ஆயிரம் ஆண்டுகள் போர் புரிந்தனர். முரனின் ஆற்றலைக் கண்டு வியந்த முராரி தாம் களைத்தவர் போல் பத்திரிகாச்சிரமம் சென்று சிம்மாவதி என்ற குகைக்குள் பள்ளி கொண்டார். முரன் திருமால் இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து அவரைக் கொல்ல வாளை ஓங்கினான். அப்போது திருமாலின் உடலிலிருந்து ஒரு கன்னிகை உதித்தாள். ஆயுதங்களைத் தாங்கி முரனைப் போருக்கு அழைத்தாள். அரக்கன் அம்பு எடுக்கு முன் அம்பிகை ரீங்காரம் செய்ய, முரன் சாம்பல் ஆனான். திருமால் தாம் கொண்ட அறிதுயில் விழித்து அம்பிகையைப் போற்றினார். அம்பிகைக்கு ''ஏகாதசி'' எனப் பெயர் தந்தார்.

மார்கழி கிருஷ்ண பட்ச (தேய்பிறை) ஏகாதசிக்கு உற்பத்தி ஏகாதசி என்பது பெயர். அன்றுதான் திருமால் உடலில் அம்பிகை ''ஏகாதசி'' உருவாகிய நாள். இந்நாளில் உபவாசமிருந்து பரமனைப் பூஜிப்போர் பரமபதம் அடைவர். இம்மையிலும் கோரிய பயனைப் பெறுவர். மார்கழி சுக்கில பட்ச (வளர்பிறை) ஏகாதசிக்கு மோட்ச ஏகாதசி என்பது பெயர். இதைப் பெரிய ஏகாதசி என்றும் வைகுண்ட ஏகாதசி என்றும் கூறுவார்கள். அச்சமயம் அச்சுதனை அர்ச்சிப்போர் மோட்சம் அடைவர். அவர்களது மூதாதைகளும் முக்தி பெறுவர்.

தை மாத கிருஷ்ண ஏகாதசிக்கு சபலா என்பது பெயர். இந்த ஏகாதசியில் சகல கனிகளையும் நிவேதனம் செய்ய, சகல பாபங்களும் அகலும்.

தை மாத சுக்கில ஏகாதசி புத்ரதா எனப்படும். புத்திர பாக்கியம் இல்லாதார் விரதமிருக்க புத்திர பாக்கியம் உண்டாகும்.

மாசி மாதம் கிருஷ்ண ஏகாதசி சட்திலா எனப் பெயர் பெறும். பசிப் பிணியில்லாமல் வளமுடன் வாழ வரமளிக்கும் விரதமிது. மாசி மாதம் சுக்கில ஏகாதசி ஜயா எனப்படும். பேய்க்கும் நற்கதி தரும் விரதமிது.

பங்குனி கிருஷ்ண ஏகாதசி விஜயா எனப்படும். எண்ணியுள்ள காரியங்களில் வெற்றி தந்து அவரவர் கோரும் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்.

பங்குனி சுக்கில ஏகாதசிக்கு ஆமலகி என்று பெயர். நெல்லி மரத்தருகே சுத்தம் செய்து விரதமிருக்க எல்லாப் புண்ணிய நதிகளிலும் நீராடிய பலன் கிடைக்கும்.

சித்திரை கிருஷ்ண ஏகாத்சி பாபமோசனிகர எனப்படும். இழந்த பேறுகளைத் திரும்பப் பெறலாம்.

சித்திரை சுக்கில ஏகாதசி காமதா எனப்படும். எந்த ஆசை கொண்டு இந்த ஏகாதசியை அநுட்டித்தாலும் அவ்வாசை பூர்த்தியாவது திண்ணம்.

வைகாசி கிருஷ்ண ஏகாதசி வருதினி எனப்படும். சேனைபோல் காக்கும். சகல பாவங்களையும் அகற்றி சௌபாக்கியம் அளிக்கும்.

வைகாசி சுக்கில ஏகாதசி மோகினி எனப்படும். மனம் கொண்ட மோகத்தை அகற்றுவது மோகினி ஏகாதசி.

ஆனி கிருஷ்ண ஏகாதசி அபரா எனப்படும். அன்று பகவானை திரிவிக்கிரமராகப் பூசிக்க பிரம்மஹத்தி, பொய்சாட்சி கூறுதல், குருநிந்தை முதலிய பாவங்கள் நீங்கும்.

ஆனி சுக்கில ஏகாதசி நிர்ஜலா எனப்படும். சகல ஏகாதசிகளின் பயனையும் இந்த ஏகாதசி விரதத்தால் பெற முடியுமென வியாசர், பீமனிடம் அறிவுறுத்திய ஏகாதசி இது வாகும்.

ஆடி கிருஷ்ண ஏகாதசி யோகிநீ எனப் பெயர் பெறும். குஷ்டரோகத்தை அகற்றும் விரதம் இது.

ஆடி சுக்கில ஏகாதசி சயிநீ எனப்படும. தீப தான செய்த பலன் பெறலாம்.

ஆவணி கிருஷ்ண ஏகாதசிக்குக் காமிகா என்று பெயர். சொர்ணதானம் செய்த பலன் பெறலாம்.

ஆவணி சுக்கில ஏகாதசியும் தை மாத சுக்கில ஏகாதசிபோல் புத்ரதா எனவே பெயர் பெறும். புத்திர பாக்கியம் உண்டாகும்.

புரட்டாசி கிருஷ்ண ஏகாதசி அஜா எனப்படும். அரிச்சந்திரன் இவ்விரதம் இருந்து மனைவ், மகன், அரசு மீளப் பெற்றான்.


புரட்டாசி சுக்கில ஏகாதசி பத்மநாபா எனப்படும். வானம் மழைபொழிய மேற்கொள்ள வேண்டிய விரதம்.

ஐப்பசி கிருஷ்ண ஏகாதசிக்கு இந்திரா எனப் பெயர். நரகத்தில் துன்புறும் முன்னோர்களைச் சுவர்க்கம் சேர்க்கும் விரதம் இது.

ஐப்பசி சுக்கில ஏகாதசி பாபாங்குசா எனப் பெயர் பெறும். பாபத்தை அகற்ற அங்குசம் போன்றது. கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடியோர் பெறும் பயன்களை அளிக்கும்.

கார்த்திகை கிருஷ்ண ஏகாதசி ரமா எனப்படும். அரச போகம் அளிக்கும் விரதம் இது.

கார்த்திகை சுக்கில ஏகாதசிக்குப் பிரபோதனீ என்று பெயர். சகல புஷ்பங்களாலும் பெருமானை அர்ச்சிக்க, கோடி யுகம் விஷ்ணுலோகத்தில் வசிப்பா.



இராமாயணம் சுற்றுலாவை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டு இருக்கிறது. சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகள் சுற்றுலாக் கதையாகத்தான் அதைத் தந்து இருக்கிறார். எனவே சுற்றுலா ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்களிடம் ஊறிப்போன ஒன்று.

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்

---

ஆண்டில் அதிகமாக வரும் 25-வது ஏகாதசிக்குக் கமலா என்று பெயர். லட்சுமியின் மனம் இவ்விரதத்தால் குளிர்வதால் அபரிமிதமாம் செல்வம் உண்டாகும்.

ஏகாதசி விரதம் அநுட்டிக்கும் முறை :

தசமி, துவாதசி திதிகளில் ஒரு வேளை உணவு உண்ணவேண்டும். ஏகாதசி அதிகாலையில் எழுந்து நீராடி நித்திய கர்மங்களை விதிப்படி அநுட்டிக்க வேண்டும். ஏகாதசி அன்று துளசி இலை பறிக்கக் கூடாது. ஆகவே, முதல் நாளே அதைப் பறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

திருமாலுக்குப் பக்தி சிரத்தையோடு பூசை செய்ய வேண்டும். அன்று முழுவதும் உண்ணாமல் விரதமிருப்பது உத்தமம். பழங்களை நிவேதனம் செய்து உண்பது மத்திமம். அன்று எவருக்கும் அன்னதானம் செய்யக் கூடாது. பகலில் உறங்கக் கூடாது. இரவிலும் பெருமாளின் நினைவாகவே இருந்து கண் விழிக்க வேண்டும். துவாதசி அன்று காலைக் கடன்களை முடித்து பெருமாளைப் பூசிக்க வேண்டும். ஓர் அதிதிக்கு அன்னமளித்து நாம் புசிக்க வேண்டும்.

இங்ஙனம் ஏகாதசி விரதமிருந்தால் பாவம் அகலும். சந்ததி, செல்வம் பெருகும். ஞானம் பெருகும். மோட்சம் கிட்டும்.

# ஞானப்பழம் கேட்ட கந்தன்



**டாக்டர் ந. அமிர்தலிங்கம்**

ஞானப் பழம் கேட்ட
வேலன் குடி கொண்ட
பழநியில் பங்குனி உத்திரம்—தென்
பழநியில் பங்குனி உத்திரம்

தீர்த்தக் காவடிகள்
கோடி ஆடி வரும்
காட்சியைக் காணவே கண்களும் -அந்தக்
காட்சியைக் காணவே கண்களும்
(ஞானப்)

ஈசன் நெற்றி விழி வந்தவன் — குகன்
சூரர் மூவர்களை வென்றவன்
தேவி இருவரைக் கொண்டவன் — இங்கு
ஆண்டிக் கோலமுடன் நின்றவன்
(ஞானப்)

அவன் அருள் போலவே ஆறு சரவணம்
ஓடும் பக்தர்களும் ஆட — தினம்
மூழ்கித் திருப்புகழ் பாட
மலைச் சுற்றி இருவாரம் வலம் வந்த
அன்பர்க்கு
இல்லை ஒரு துன்பம் வாட — அவர்
செல்வ வளங்களும் கூட (ஞானப்)

படியேறிப் பதம் கண்டு ஓம் என்று நீ கூறு
இரவினில் வரும் தங்கத்தேரு — நாளும்
இரவினில் வரும் தங்கத்தேரு
குலமோங்க நலமோங்க முன்வந்து
வேல்காக்கும்
ஈராறு கையோனைப் பாரு —காக்கும்
ஈராறு கையோனைப் பாரு
நம்தேகம் தந்தவனும் நால்வேதம் சொன்ன
வனும்
என்றென்றும் துணை இருப்பான்
பொய்யான வாழ்வுதனைப் பொல்லாத கேடு
தனை
இலையாக்கி முத்திதருவான். (ஞானப்)

---

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002



குடந்தை அருள்மிகு நாகநாதசுவாமி ஆலயத்திற்கு ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ். ஐ.ஏ.எஸ். அவர்கள் வருகை தந்தபோது எடுக்கப் பட்ட படம். மயிலாடுதுறை துணை ஆணையாளர் திரு. சி. பாலசுப்பிரமணியம், குடந்தை உத்வி ஆணையாளர் திரு. ப. தனபால் எம்.ஏ.பி.எல். ஆகியோர் உடன் உள்ளார்கள்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருநெல்வேலி சரகத் துணை ஆணையாளர் அலுவலகப் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கே. பி. கந்தசாமி எம்.ஏ. அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். உடன் உள்ளார்.